5-12 1963 –




## நவீன முறையில் படப்பிடிப்பு

- பெருப்பித்தல்,
- வர்ணந்தீட்டுதல்,
- புளக் செய்தல்


**மற்றும் படப்பிடிப்பு (Photography)**

சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய ஸ்தாபனம்.

சொந்தக்காரர்:- J. A. பேரின்பநாயகம்.

புத்துணர்வை அளிக்கும் உயர்ந்தபீடி,
இலங்கை மக்கள் விரும்பிப் பாவிக்கும் பீடி

ஸ்டீம்
ஸ்பெஷல்
903



கபூர்
பீடிகள்

பீடிகளிலேயே காரம் மிகுந்தது
பீடிகளில் குணம் மிகுந்தது
பீடிகளில் மிகச் சிறந்தது

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த
பீடி இலைகளும், புகையிலைகளும்
எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

தலைமைக் காரியாலயம்: திருச்சி.
கிளைகள்: திருநெல்வேலி; கொழும்பு

என். பி. அப்துல் கபூர்

102/2, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு-13

தந்தி: GAFOORBIDI

போன்: 4929

அதிசயமும் இல்லை! ஆச்சரியமும் இல்லை!

எனினும் பார்த்தால்

பரவசமடைவீர்கள்

# 1964-ம் வருட

## மெய்கண்டான் பேர்ஸ் டயறிகள்
## மெய்கண்டான் பிளாஸ்டிக் டயறிகள்

மற்றும்

மெய்கண்டான் மேசை (அலுவல் குறிப்பு) கலண்டர்கள்

இறக்குமதி செய்யப்படுபவைகளைவிட மேலானவை.

இத்தனைக்கும் பாதிவிலை

கண்ணைப்பறிக்கும் வண்ண அழகில் கவர்ச்சிகரமான வடிவங்களில் கட்டுக்கோப்பான வேலைப்பாடுகளுடன் வலிவும், பொலிவும், கலையுணர்வும் மிகுந்து திகழ்கின்றது.

தினசரி பாவிப்பதற்கு மிகக்குறைவான விலையில் கிடைக்கிறது.

இன்றே ஒரு மெய்கண்டான் டயறியை அல்லது கலண்டரை வாங்கிப் பரீட்சித்துப் பாருங்கள்.

எல்லா பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

## விலை விபரங்கள்

| | | |
|---|---|---|
| இங்கிலீஸ் பேர்ஸ் டயறி பேர்ஸுடன் | | 2-60 |
| ஜெம்பேர்ஸ் டயறி | ,, | 2-25 |
| சிங்கள பேர்ஸ் டயறி | ,, | 2-60 |
| தமிழ் பேர்ஸ் டயறி | ,, | 2-60 |
| மேசை டயறி (பிளாஸ்டிக் கவருடன்) | | 2-95 |
| உத்தியோகஸ்தர் டயறி (வலற் கவருடன்) | | 4-50 |
| மேசை (அலுவல் குறிப்பு) டயறி (பிளாஸ்டிக்) | | 4-35 |
| லோயர்ஸ் டயறி (பிளாஸ்டிக் கவருடன்) | | 4-50 |
| டாக்டர்ஸ் டயறி | ,, | 4-50 |
| வலட் டயறி (கவர்ச்சிகரமான வலட்) | | 5-50 |
| பிஸ்னஸ் 'A' டயறி (பிளாஸ்டிக் கவருடன்) | | 3-10 |
| பிஸ்னஸ் 'B' டயறி | ,, | 2-60 |
| சிங்கள கலண்டர் இல. I | | 1-75 |
| திருக்குறள் கலண்டர் இல. I | | 1-85 |
| மேசை (அலுவல் குறிப்பு) கலண்டர் | | 5-00 |

## மெய்கண்டான் அச்சியந்திரசாலை

161, செட்டியார் தெரு


கொழும்பு-11. போன் : 79141

கிளை: 10, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் (போன்: 236)

# எல்லா டிராக்டர்களையும் விட

# 1.500.000

# கமக்காரர்களினால் மிகச்சிறந்ததென நிரூபிக்கப்பட்டுவிட்டது!



## மஸ்ஸி - பெர்குசன்

### ஆர்ன்கோ அக்ரிகல்சரல் இன்டஸ்றீஸ்

பரந்தன் - வவுனியா

# கென்னடியின் பெயரால்......

மக்களாட்சி நடைபெறும் மாபெரும் நாட்டின் மதிப்பிற்குரிய தலைவர் மறைந்துவிட்டார். பொன் கொழிக்கும் நாட்டின் புகழ் குவித்த தலைவர் புகழுடம்பு பெற்றுவிட்டார். தன்னலம் துறந்த கென்னடிப் பிரபு இன்று தரணியையே துறந்துவிட்டார்.

அமரர் காந்தியடிகளுக்குப் பின், அமெரிக்கர் கென்னடியின் அகால மரணம் அகில உலகையும் அதிர்ச்சியடையச் செய்து விட்டது. சிந்தையாற் சொந்தமான டந்துக்களுள் ஒருவரை இழந்து நொந்து போயிருக்கின்றனர் ஒவ்வொருவரும்.

நிறவெறியை எதிர்த்தார் அவர்; நீக்கிரோக்களுக்குப் பல உரிமைகள் கொடுத்தார்; பின் தங்கிய நாடுகளின் முன்னேற்றத் தையுன்னிப் பொன்னையும் பொருளையும் அள்ளிக் கொடுத்தார். தடுமாறிய உலகில் ஒரு நடுவீதியை அமைத்து, அதில் குருஷ் ஷேவுடன் கைகோத்துக் கொண்டு சென்று குவலயம் முழுவதை யும் குதூகலிக்கச் செய்தார்.

நல்லோரின் நாயகனை எல்லோரும் போற்றினார்கள்.

ஆனால்...?

வெறி நிறைந்த ஒருவனின் நெறி மறந்த செயல் அவரின் உயிரைப் பறித்துவிட்டது; உலகின் நம்பிக்கைகளைக் குறைத்து விட்டது.

ஒரே ஒருவனுக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக ஓர் உலக உத்தமனின் உயிர் பறிபோவதா? இதை நினைத்து உலகம் உள் ளளவும் உத்தமர்களின் உள்ளம் பற்றியெரிவதா?

பொன்னுலகம் சென்றுவிட்ட கென்னடியின் பெயரால் இந் நிலத்தோர் அனைவரையும் இரந்து நாம்கேட்கின்றோம்: சகிப்புத் தன்மையையும் சமாதான நெறியையும் சரிவரக் கடைப்பிடியுங் கள். அன்பினால் உலகினை ஆள விரும்புங்கள்.

உலகம் வாழ்ந்தாற்றான் நாம் வாழலாம்.

சின்னஞ்சிறு பருவத்திலேயே சிறப்பான பண்புகளைச் சிறு வர்கட்கு ஊட்டுங்கள்.

இனிவரும் உலகமாவது, பண்பும் அன்பும் பணிவும் கொண்ட நல்லவர்களும் வல்லவர்களும் மட்டும் வாழும் உலக மாக மிளிரட்டும்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். இந்த இதழில் புதிய எழுத்தாளர் மூவர் இடம் பெறுகின்றனர். அன்புடன் வாழ்ந்த அருமை மனைவி இறந்துவிட்டாள், மரண ஊர்வலம் செல்கிறது. பழைய இன்ப நினைவுகள் அவனைப் பைத்தியமாக்குகின்றன. இறுதியில் அவன் துன்பம் தெளிகின்றது. "தீப்பொறிகள்" என்ற தலைப்பில் இந்தக் கதையை எழுதும் இ. சிவானந்தன் இலங்கைப் பல்கலைக் கழக மாணவர். "காதல் கடித"த்தை எழுதும் எஸ். ராஜகோபாலன், கொக்குவில், கனிட்ட நுண்கலைக் கல்லூரியில் கல்வி பயில்பவர். இவருடைய கதையின் கரு சாதாரணமானதுதான். ஆனால் நகைச்சுவையைக் கலந்து, படிக்க இனிக்கும் வகையிற் கதையைத் தருகின்றார். பரணி ஆறுமுகம் கொக்குவிலில் வாழ்பவர். நல்ல கவிஞராக மலர்வதற்குரிய அறிகுறிகள் அவரிடம் காணப்படுகின்றன.

எம். எம். மக்கீன் உங்களுக்குப் புதியவரல்லர். "கலைச்செல்வி" சிறுகதைப்போட்டியில் மூன்றும் பரிசைப் பெற்ற அவர் இலங்கை வானொலியிற் பணியாற்றுகின்றார். நெஞ்சைத் தொடும் விதத்தில் அப்துல்லாவின் பரிதாப நிலையைத் தன் கதையிற் கூறுகின்றார். மு. பொன்னம்பலத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லையே! "புதுசும் பழசும் அல்லாத ஒருவித திரிசங்கு நடை"யிற் "தேசீயம்" பற்றிப் பாடுகின்றார் அவர். இந்த மார்கழி மாதம், சைவ நன்மக்களுக்கு மிகவும் புனிதமான மாதமாகும். இலட்சக் கணக்கான அன்பர்கள் "ஆர்த்திரா தரிசனம்" காண்பதற்காகச் சிதம்பரம் செல்வார்கள். "கோவில்" என்ற தனிச்சிறப்பைப் பெற்ற தில்லை நடராஜர் ஆலயத்தைப் பற்றிய ஒரு கட்டுரையை, சென்னையிலிருந்து வெளியாகும் "வைதிக தர்மவர்த்தினி" யிலிருந்து மறுபிரசுரஞ் செய்கின்றோம். இந்த மாதம் இசைக்குரிய மாதமுமாகும். சென்னையிலும் தமிழ் நாட்டின் மற்றைய இடங்களிலும் இசை வெள்ளம் பெருக்கெடுத்தோடும். இந்தச் சந்தர்ப்பத்தில் 'தமிழிசை'பற்றி எழுதுகின்றார் ஈழவேந்தன். தமிழுணர்ச்சி நிறைந்துள்ள இவ்விளைஞர் கொழும்பிலுள்ள வங்கியொன்றில் வேலை செய்கின்றார். இந்த இதழிலுள்ள மற்றைய அம்சங்களும் வழக்கம் போல் உங்களுக்குச் சுவையூட்டும் என நம்புகின்றோம்.

அடுத்து வெளிவரவிருப்பது பொங்கல் மலர். புதுமையான அம்சங்கள் பல இடம்பெறுகின்றன. ஈழத்திலுள்ள பழைய எழுத்தாளர்கள் பலர் மீண்டும் எழுதுகின்றனர். மலர் பற்றிய விபரங்களைப் பிறிதோரிடத்திற் காணலாம்.

விமர்சனத்திற்கு அனுப்பிய நூல்களைப் பற்றி அன்பர்கள் அடிக்கடி நினைவூட்டவேண்டிய அவசியமில்லை! பொங்கல் மலரிலிருந்து விமர்சனப் பகுதி ஒவ்வோர் இதழிலும் இடம் பெறும்

ஈழத்து எழுத்தாளர்கள், வீண் பிரச்சனைகளிற் பொழுதையும் சக்தியையும் விரையஞ் செய்கின்றார்களே தவிர, உண்மையான ஆக்க முயற்சிகளில் ஈடுபடுவதில்லை என்ற ஒரு கருத்து இப்போது நிலவுகின்றது. இக் கருத்து ஆதாரமற்றது என்றுஞ் சொல்வதற்கில்லை. இந்த நிலை மாறவேண்டும். முதலில், சிறுகதை எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தி, சிறந்த கதைகளை அவர்கள் எழுதுவதற்குத் தூண்டும் வகையில் ஒரு திட்டத்தை நாம் ஏற்படுத்த விரும்புகின்றோம். பொங்கல் மலரில் இந்த விபரங்களை வெளியிடுவோம்.

வணக்கம்.

—ஆசிரியர்.




உலகில் மிக நீண்டகாலம் நடைபெற்ற பத்திரிகையின் பெயர் ‘ பீகின் பாவே" என்பது. சூகுங் என்பவர் கி. பி. 4ம் நூற்றுண்டில் இப் பத்திரிகையை ஆரம்பித்தார் 1500ஆண்டுகள் வெளிவந்த இந்தப் பத்திரிகை சென்ற 1934ம ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறுத்தப்பட்டுவிட்டது.

ஃ ஃ ஃ

பிரபல ஆங்கில எழுத்தாளரான ஹெரேக்என்பவர் இருபத்திநான்கு மணி நேரமும் குடிபோதையிலே இருக்க விரும்புபவர். காலே 4மணிக்கு எழுந்து மதுபானக் கடைக்குச் சென்ருல், இரவு 12மணிக்குத்தான் வீடு திரும்புவார். ஒரு சமயம் இவருடைய எண்ணம் மாறியது. “இனிமேல் குடிக்கச்கூடாது" என்று தீர்மானித்துக்கொண்டு நிம்மதியாகத் தூங்கினுர். அடுத்தநாள் வழக்கத்திற்கு மாருக விடியற்புறம் 3மணிக்கே எழுந்துவிட்டார். அன்று குடிப்பதில்லை என்று நினேத்தார். நிமிடங்கள் கழிந்தன. சிறிய முள் நான்கிற்கு வந்தது. ஒருமணி நேரத்தைக் குடிக்காமல் கழித்ததில் அவருக்குப் பெரும் மகிழ்ச்சி. அந்த வெற்றி விழாவைக் கொண்டாடுவதற்காக உடனே மதுபானக் கடைக்குச் சென்று இரு மடங்கு குடித்தார்!

ஃ ஃ ஃ

சினிமாத் தொழில் இப்போது லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் பலருக்கு வருவாயைக் கொடுக்கின்றதல்லவா? இந்தச்சினிமாவைத் தயாரிக்க உதவும் கமராவை முதன் முதலிற் கண்டுபிடித்தவர் வில்லியம் ப்ரீஸ் கிரீன் என்பவர். அவர் இறக்கும்போது அவரிடம் எண்பது சதம் மட்டுமே இருந்தது!

ஃ ஃ ஃ

“என்னேச் சினிமா நடிகன் என்று அழைப்பதைவிட வீணை வித்துவான் என்று அழைப்பதையே விரும்புகின்றேன்" என்று கூறும் எஸ். பாலசசந்தர் ஒரு சகல கலா வல்லவர். கதை, வசனம் எழுதுதல், நடித்தல், நட்டுவாங்கம் செய்தல், இசையமைத்தல், படம் தயாரித்தல் முதலியவற்றுடன் வீணே, கஞ்சிரா ஆகியவற்றை வாசிப்பதிலும் வல்லவர். சதுரங்க ஆட்டத்திலும் இவர் நிபுணர். பிரபல ஓவியரான எஸ். ராஜம் என்பவர், இவருடைய அண்ணன். சகோதரர்கள் இருவரும், சகோதரி ஜெயாவும் சேர்ந்து “சீதா கல்யாணம்" என்ற படத்தில் நடித்துள்ளனர்.

ஃ ஃ ஃ

கொள்கைகள் வேறுபட்டிருந்தாலும், எழுத்தாளர் என்ற வகையில் எல்லாரும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்று கூறும் சில எழுத்தாளர்களே, ஈழத்தில் பிளவையும் பிரிவையும் வளர்த்துவருகின்ருர்கள். ஆனல் இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்த ஒற்றுமையை நாம் நன்கு அவதானிக்கலாம். பல்வேறு கொள்கைகளேயுடையஎழுத்தாளர்கள் சென்னேத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்ருர்கள். மொத்தம் 348 உறுப்பினர்களேக் கொண்ட இச் சங்கத்தில், கலேச் செல்வி ஆசிரியருட்பட, ஏழு ஈழத்து எழுத்தாளர்களும் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

**சோர்வை நீக்கி**

**உற்சாகத்தை ஊட்டுவது**

# 786

# கல்கி பீடிகள்




786 கல்கி பீடி

## இன்றே பாவித்துப் பயனடையுங்கள்.

திறம் பீடிப்புகையிலை, பீடியிலை, மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

| | |
|---|---|
| 39, K. K. S. வீதி<br>யாழ்ப்பாணம் | 44, 3ம் குறுக்குத் தெரு,<br>கொழும்பு |

தொழிற்சாலை:

118-12 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

# சிதம்பரம்

N. கிருஷ்ணன்

தில்லைச் சிற்றம்பல முடையானின் அருள் தலமாகிய சிதம்பரம், தமிழ் நாட்டின் மிகப் பழமையான க்ஷேத்திரங்களில் ஒன்றாகும். இது சென்னைக்குத் தெற்கே 151 மைலிலுள்ளது.

உலகில், கடவுள் கிருபையால் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரஹம் என்னும் ஐந்து விதமான தொழில்கள் இடைவிடாமல் எப்பொழுதும் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த பஞ்ச கிருத்தியங்களின் பொருட்டு ஈசனால் செய்யப்பட்ட தாண்டவங்கள் ஏழு எனவும் அவற்றை வெவ்வேறு தலங்களில் செய்தருளியிருக்கிறார் எனவும் கூறப்படுகிறது. முதலாவது படைத்தற் செயலைக் (சிருஷ்டி) குறிப்பது காளிகா தாண்டவம், அல்லது முனிதாண்டவமாகும், இதை ஈசனார் திருநெல்வேலி தாம்பிர சபையில் நிகழ்த்தியதாகவும், காத்தல் என்னும் இரண்டாவது செயலைக் குறிக்கும் தாண்டவங்களாகிய கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம் என்பவைகளை முறையே பாண்டியநாட்டுத் திருப்புத்தூர் சிற்சபையிலும், மதுரை வெள்ளியம்பலத்திலும் இறைவன் நிகழ்த்தியதாகவும், அழித்தல் என்னும் மூன்றாவது செயலைக் குறிக்கும் சம்ஹார தாண்டவத்தை நள்ளிரவிலும். மறைத்தல் என்னும் நான்காவது செயலைக்குறிக்கும் திரிபுரத் தாண்டவத்தைத் திருக்குற்றாலத்துச் சித்திர சபையிலும், ஐந்தாவது அருளல் என்னும் செயலைக்குறிக்கும் ஊர்த்துவ தாண்டவத்தை (இதைக் காளிதாண்டவம் எனவும் கூறுவர்) திருவாலங்காடு இரத்தின சபையிலும் செய்ததாகக் கூறப்படுகிறது. இந்த ஐந்து செயலையும் ஒருங்கே குறிக்கும் ஆனந்தத் தாண்டவத்தை சிதம்பரம் என்னும் தில்லைப் பொன்னம்பலத்தில் செய்தருளியதாகப் புராண வரலாறு கூறுகின்றது. இந்தத் தாண்டவத்தை நாதாந்த நடனம் எனவும் கூறுவர்.

இந்த ஆனந்தத் தாண்டவம் மற்றைய தாண்டவங்களுள் மேலானதாம். இறைவனால், ஐந்து செயல்களும் ஒருங்கே செய்தருளுகிற இந்த ஆனந்தத்தாண்டவம் உலகில் உயர்ந்த தாண்டவம் என அறியத் தக்கது. இவ்வைந்து செயல்களும் நடராஜப் பெருமானின் தாண்டவத் திருவுருவில் அமைந்திருப்பது ஒரு தனிச்சிறப்பாகும். கூத்தப் பெருமானின் கையிலுள்ள உடுக்கையிலிருந்து உண்டாகும் நாதத்திலிருந்து உலக சிருஷ்டியையும், அபய ஹஸ்தம் காட்டும் கை, காத்தல் செயலையும் அக்கினியை ஏந்தியகை அழித்தல் செயலையும், தூக்கிய குஞ்சிதபாதம் அருளல் செயலையும் குறிக்கின்றன, என அறிகிறோம்.

மார்கழித்திங்கள் திருவாதிரை நன்னாளில் இந்தத் தாண்டவ

மூர்த்தியைத் தரிசிப்பது மிகச்சிறந்த பேறென்று கருதப்படுகிறது. அதிலும் சிதம்பர க்ஷேத்திரம் உடனே முத்தி தரும் இடமாகும். இறைவன் இத்தாண்டவத்தை முனிச்ரேஷ்டர்களான பதஞ்சலி, வியாக்கிரபாதர்களுக்காக தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடிக்காட்டினர்.

ஒரு முனிவர் தில்லையின் பெருமையைக்கேட்டு, தில்லைவனத்திலே ஈசனை வழிபட வந்தார். அங்கு ஒரு ஆலமரத்தின் நிழலில் சுயம்பு லிங்கத்தைக் கண்டார். (அதுவே திருமூலாட்டானேசுவரர் சந்நிதியாகும்.) இறைவனை வேண்டி தாமே மரங்களில் ஏறிப் பூக்களைப் பறிக்கவும், பொழுது புலருமுன் இருட்டில் சஞ்சரிக்கவும், புலிக்கால்களையும், புலிக் கண்களையும் பெற்று வ்யாக்கிரபாதர் என்ற பெயரோடு வெகு சிரத்தை கொண்டு வழிபட்டார். அதுசமயம் ஆதிசேடன் விஷ்ணுவின் மூலம் ஈசனின் ஆனந்தத் தாண்டவத்தைப் பற்றி சொல்லக்கேட்டு, தாமும் அதனைக்காண ஆசைகொண்டு தவம் செய்தார். ஈசனும் மகிழ்ந்து தனது தாண்டவத்தைத் தில்லையில் காணலாம் எனச் சொல்லி மறைந்தார். ஆதிசேடனும் பதஞ்சலி என்னும் பெயருடன் பாதி மனிதன், பாதி பாம்புமான உருவத்துடன் தில்லையை அடைந்து திருமூலாட்டானேசுவரரைத் தொழுதுகொண்டு ஈசனின் தாண்டவத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அடியார்களின் பொருட்டு ஈசன் தில்லைவனத்தில் தமது தாண்டவத்தை நிகழ்த்த வந்ததும், தில்லையம்பதியில் இடம் பெற்றிருந்த தேவி காளியானவள் இறைவனைத் தன்னுடன் போட்டிக்கு அழைத்தனள். இறைவனும், தனது ஊர்த்துவ தாண்டவத்தால் அவளது செருக்கை அடக்கி, தில்லைக் காளியைத் தில்லையின் வடபால் அமரச்செய்தார். இன்றும் தில்லைக் காளியின் கோயில் சிறப்புப் பெற்று விளங்குகிறது. இதனைத் தரிசித்த பதஞ்சலி, வ்யாக்ரபாதர்களுக்கு அருள்பாலித்து அவர்கள் விருப்பப்படி சிதம்பர க்ஷேத்திரத்தில் என்றும் காட்சி அருளிக்கொண்டிருக்கிறார்.

சிதம்பரம் என்ற மொழிக்கு ஞான ஆகாசம் எனப் பெயர். பஞ்சபூத ஸ்தலங்களுள் சிதம்பரம் ஆகாச வடிவில் இறைவன் இருக்கும் ஸ்தலமாகும். இந்த ஸ்தலத்திற்குத் தில்லைவனம், பெரும்பற்றப் புலியூர், புண்டரீகபுரம், வியாக்கிரபுரம், பூலோ கைலாசம் எனப் பல பெயர்கள் உண்டு. சரீரத்தில் ஹ்ருதயம் எப்படி முக்கியமானதோ, அவ்வாறே ஸ்தலங்களில் சிதம்பரம் ஹ்ருதயம். ஆறு ஆதார ஸ்தலங்களில் சிதம்பரம் அனுஹதமாகும்.

இந்த சிற்றம்பலமுடையானுக்கு சபாபதி, சபாநாதன் என்றும் பெயர். இப் புண்ணியமூர்த்தியைப் பூஜித்து பேறு பெற்றவர்கள் பலராவர். அவர்களுள் முனிசிரேஷ்டர்களான பதஞ்சலி, வ்யாக்கிரபாதர், உபமன்யு, வியாசர், ஜைமினி முதலியவர்களும் ஆவார்கள். மேலும், பல்லவ மன்னன் சிம்மவர்மன் என்பவன் இறைவனைத் தரிசித்து, சிவகங்கை குளத்தில் நீராடித் தனது நோய் நீங்கி பொன்மேனி பெற்றான் எனக் கூறப்படுகிறது. திருஞானசம்பந்தர் சிதம்பரத்திலிருக்கும் நடராஜப் பெருமானைத் தரிசிக்கும் பாக்கியமே பாக்கியம் என்ற தன் எண்ணத்தை

இனிய பாகாத்தில் பாடி அறிவித்துள்ளார். அப்பர் சுவாமிகள் தில்லைச் சிற்றம்பல முடையானைக் கண்டு பாடியுள்ள பாக்கள் உள்ளத்தை அள்ளுகின்றன. சுந்தரர் தில்லையை அணுகி இறைவனின் தாண்டவத்தைக்கண்டு பாடிப் பரவசமடைந்திருக்கிறார். மாணிக்கவாசகர் இத்தலத்தில் சிலகாலம் தங்கியிருந்து இறைவன் அருளால் பௌத்த சமயவாதிகளை வென்று, ஊமைப் பெண்ணையும் பேசவைத்திருக்கிறார். நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியாரும் சிற்றம்பலத்தில் ஒரு அறையிலிருந்து தேவார ஏடுகளைப் பெற்றார்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் இந்த க்ஷேத்திரத்திற்கு வந்து, ஸ்படிக லிங்கமாகிய அழகிய சிற்றம்பலமுடையானைக் கொடுத்து சிதம்பர சக்கரம் ஒன்றையும் ஸ்தாபித்தார் எனக் கூறப்படுகிறது.

சிற்றம்பல முடையானின் ஆலயம், தில்லைநகரில் நடு நாயகமாக 40 ஏக்கர் நிலப்பரப்பில், நான்கு திசைகளிலும் நான்கு ராஜகோபுரங்களோடு அழகாக அமைந்துள்ளது. இக்கோயில் மிகப் பழமையானது எனவும் 5-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கோயிலுள் ஐந்து சபைகள் உள்ளன. அவைகள் சித்த சபை, கனகசபை, தேவசபை, நிருத்த சபை, ராஜசபை எனப்படுவன.

சித்சபையே சிற்றம்பலம் எனப்படும். இது நடராஜபெருமானும் சிவ

## திருக்குறள் கீர்த்தனை-13

விண் இன்று பொய்ப்பின் விரி நீர் வியனுலகத்து
உள் நின்று உடற்றும் பசி.

ராகம்: ஹம்ஸத்வனி — தாளம்: ஆதி

### பல்லவி

பஞ்சமும் பசியும் பாரினுள் படர்ந்தே
வஞ்சனையாய் வருத்தும் வான்மழையின்றேல்

### அனுபல்லவி

கொஞ்ச மழையேனும் கொட்டாமலும் உலகில்
மிஞ்சி மழைதானும் மிகுதியாய் சொரிந்தாலும்

### சரணம்

ஆழ்ந்த கடல் நீரினால் சூழ்ந்த இவ்வுலகினில்
வாழ்ந்ததும் தாழ்ந்ததும் வான்மழையாலே
வீழ்ந்த மழை தன்னால் வாழ்ந்திடும் பேருயிர்கள்
வீழாது மழை பொய்ப்பின் விழங்கிடுமே கொடிய

— யாழ்ப்பாணம் ந. வீரமணி

காமசுந்தரியம்மையும் எழுந்தருளியிருக்கும் இடமாகும். இதனை முதற் பராந்தகன் (கி.பி. 907–953) பொன் வேய்ந்து புதுப்பித்தானெனக் கூறப் படுகிறது. இச்சபையில் ஸ்ரீ நடராஜ பெருமானின் வலதுபுறம் சிதம்பர இரகசியம் இருக்கிறது. இதில் மந்திர சொரூபமாக திருவம்பலச் சக்கரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆகாய லிங்கம் சிதம்பர ரகசியமாக திருவாசியுடன் அமைந்து அதனை ஒரு வில்வ மாலையுடன் காணலாம். இங்கு ஸ்ரீ ஆதிசங்கரர் அளித்த ஸ்படிக லிங்கம் அழகிய சிற்றம்பலமுடையார் என்ற பெயருடனும், இரத்ன சபாபதியாகிய நடராஜாவும், ஸ்வர்ணகால பைரவரும் காட்சி அளிக்கின்றனர்.

கனகசபை சிற்றம்பலத்திற்கு எதிரேயுள்ளது. இங்கு தினமும் திருவம்பலமுடையாரும், இரத்தின சபாபதியும் அபிஷேக ஆராதனைகள் பெறுகின்றனர்.

தேவசபை என்பது பேரம்பலம் எனப்படும். இங்கு உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கின்றனர். இதனை அநபாயன்என்ற இரண்டாம்குலோத்துங்கன் (கி. பி. 1138–1150) பொன்னினுல் மெழுகினுன் எனப் பெரிய புராணம் கூறுகிறது.

நிருத்தசபை என்பது நடராஜ பெருமானின் திருமுன்னர் கொடி மரத்தின் தென்பால் உள்ளது. மண்டபம் யாவும் குதிரைகள் பூட்டிய தேர் அமைப்பைக் கொண்டு மிகவும் சித்திரவேலைப் பாடமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப்பெற்றுள்ளது. இங்கு ஊர்த்துவ தாண்டவமூர்த்தி காட்சியளிக்கிருர்.

இராஜசபை என்பது ஆயிரங்கால் மண்டபமாகும். இங்கு ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு வருஷத்திற்கு இருமுறை ஆனியிலும், மார்கழியிலும் மிகச் சிறப்பாக அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. மார்கழிமாதம் திருவாதிரையன்று நடக்கும் அபிஷேகம் உலகப் பிரசித்தமானது.

இக் கோயிலிலுள்ள திருமூலாட்டானேசுவரர் பாதாளத்தில் ஒரு பர்வதத்தின் கொழுந்து எனக் கூறப் படுகிருர். இவர் சுயம்பு மூர்த்தி, ஆலமரநிழலில் வ்யாக்கிரபாதரும். பதஞ்சலியும் பூஜித்த மூர்த்தியாவர். இங்கு அம்மன் கோயில் தனித்த பெரும் ஆலயம். கிழக்கு நோக்கி யுள்ளது. அம்மனின் முன்புற மகா மண்டபம் சிற்பச் சிறப்புடன் பெருமிதத்தோற்றமுடையது. இங்கு தூணுடன் செதுக்கியிருக்கும் கல்லாலான சங்கிலித் தொடரையும், திருச்சுற்று மாளிகையின் கீழ்வரிசையில் சிற்ப உருவில் காணும் நாட்டியமாடுபவர்களையும், வாத்தியக்காரர்களையும் கண்டு வியக்காதவர்களில்லை.

இந்த க்ஷேத்திரத்தில் ஹரனையும் ஹரியையும் ஒரே சமயத்தில் தரிசனம் செய்யும் பாக்கியம் உள்ளது. கனகசபையின் முன் தில்லைக் கோவிந்தராஜப் பெருமாள் கோயில் உள்ளது. இதனைக் காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவிலைக் கட்டிய இரண்டாம் நந்திவர்ம பல்லவமன்னன் (கி.பி. 717–782) நிறுவியதாகக் கூறப்படுகிறது. பெருமாள் கிழக்கு நோக்கி, சாத்விக விமானத்தின் கீழ் போக சயனத்தில் காட்சியளிக்கிருர். திருமங்கை ஆழ்வாராலும் குலசேகர ஆழ்வாராலும் பாடப் பெற்றுள்ளார். தில்லை மூவாயிரவரே பெருமாளைப் பூஜித்து வந்ததாக குல

சேகர ஆழ்வார் தனது பாசுரத்தில் கூறியுள்ளார். இந்த கோவிந்தராஜப் பெருமாளை 12ம் நூற்றூண்டில் அநபாயச் சோழன் அப்புறப்படுத்தியதாகவும் 1539ல் கிருஷ்ணதேவராயரது தம்பியான அச்சுதராயரது ஆளுகையில் மறுபடியும் அவரது பழைய ஸ்தானத்தில் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இப்பெரும் தலத்தைச் சுற்றிலும் தெய்வமணம் கமழும் திருக்கோயில்கள் பல உள. தலத் தீர்த்தங்கள் 12 உள்ளன. இவற்றுள் மிகச் சிரேஷ்டமானது சிவகெங்கை.

இத் திருக்கோயிலின் பகுதிகள் ஒவ்வொன்றும்வெவ்வேறு அரசர்கள் காலத்தில் கட்டப்பட்டவைகளாகும். இரண்டாம் குலோத்துங்க சோழன் தனக்குத் தில்லையில் முடிசூட்டு விழா நடத்தியும், கோயிலின் கிழக்குக் கோபுரத்தையும் அமைத்து, பல பகுதிகளுக்குப் பொன் வேய்ந்து, திருப்பணி செய்திருக்கிறுன். பாண்டியர்களில் தலைசிறந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-1271) தன் வெற்றிகள் காரணமாகத் தில்லையில் மேற்குக் கோபுரத்தை அமைத்தான். கி. பி. 1516ல் விஜயநகர அரசன் கிருஷ்ணதேவராயர் தனது வடநாட்டு வெற்றிச் சின்னமாக வடக்கு ராஜகோபுரத்தைக் கட்டியுள்ளார். கிழக்குக் கோபுரத்தின் நிலைகளில் செதுக்கப்பட்டிருக்கும் பரதநாட்டியச் சிற்பங்கள் அவசியம் காணத்தக்கவை.

18-ம் நூற்றூண்டில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக் காரர்களுக்கும் நடந்த போர்களில் பல தடவைகள் ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர்கள், முகமதியர்கள் இக்கோயிலைத் தங்கள் அரணுகக் கொண்டிருந்தனராம். அக்காலங்களில் தில்லைப் பெருமானுக்கு வழிபாடின்றி நின்றனவாம். இரண்டாவது மைசூர் யுத்தத்தில் கூத்தப் பெருமான் தஞ்சை மன்னன் உதவியால் திருவாரூருக்குக் கொண்டு போகப்பட்டு சிறிது காலம் கழித்து தில்லைக்குக் கொண்டுவரப்பட்டார் எனவும், மற்றொரு சமயம் தீக்ஷிதர்களால் மலைநாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒரு புளியமரப் பொந்தில் மறைத்து வைத்திருந்து பிறகு கொண்டுவரப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு போர்களில் சிதைவுபெற்ற இக்கோயிலைக் காஞ்சீபுரம் பச்சையப்பமுதலியார் (கி. பி, 1754-94) பெரும்பொருளைக்கொண்டு திருப்பணி செய்தார். அவரது தமக்கையாரும் அரியபல பணிகள் செய்துள்ளார். பின்பு அண்ணமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய செட்டிநாட்டு அரசர் ராஜா சர். அண்ணமலைச் செட்டியாரும், அவர்களுடைய முன்னேர்களும் பெரும் திருப்பணிகள் செய்துள்ளனர். 1891ல் ஒரு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1955ல் கோயில் திருப்பணி நடந்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. இன்றும் கொடை வள்ளலார் அவர்களின் குடும்பத்தினர் தொடர்ந்து இறைவன் திருப்பணியைச் செய்துவருகின்றனர்.

முனிசிரேஷ்டர்களான பதஞ்சலி வ்யாக்கிரபாதர்களால் நன்கு பூஜிக்கப் பட்டதும், அப்பைய தீக்ஷிதர், நந்தனர் மற்றும் பலருக்கும் முக்தி அளித்ததும், மறுஜென்மமின்றி முக்தி கொடுக்கக் கூடியதுமான இந்த சிதம்பர க்ஷேத்திரம் ஈஸ்வரனுடைய அநேக க்ஷேத்திரங்களில் மிகச் சிறந்ததாகக் கூறுவர். அது காரணம் பற்றியே சிதம்பர ஆலயத்திற்கு "கோயில்" எனப் பெரியோர்களால் பெயர்வழங்கப்படுகிறது. இவ்வாருக தில்லைச் சிற்றம்பலவான் கோயில் பூலோகக் கைலாசம் எனப்படுவது மிகப் பொருத்தம். சரீரத்தில் ஹிருதயம் எரப்படி முக்கியமோ, அவ்வாறே ஸ்தலங்களுள் சிதம்பரம் ஹிருதயம் போன்றது. ஆதலின் அண்டத்திலுள்ள தேவாலயங்களுள் விராட் புருஷனுடைய ஹிருதயஸ்தானமான சிதம்பராலயத்தை ஸேவிக்க வேண்டியது மிக அவசியமாகும்.

# தமிழ் இசை

- ஈழவேந்தன் -

ஆங்கிலேயனைப் பார்த்து "நீ ஆங்கிலத்தில் பாடு" என்று யாம் கேட்பதில்லை. அதுபோன்றுதான் இத்தாலியனையோ, பிரஞ்சுநாட்டவனையோ சீனதேசத்தவனையோ பார்த்து "நீ உன்மொழியில் பாடு" என்று யாம் கேட்பதில்லை. காரணம் இயற்கைக்கு இயைந்த முறையில் தம் தம் மொழியில் தான் அவர்கள் பாடுவது வழக்கம். ஆனால் கேவலம் எம் தமிழ் இனத்தைப் பொறுத்தவரை ஒரு தமிழ்ப் பாடகனையோ பாடகியையோ பாடச்சொன்னால் அவனோ. அவளோ தெலுங்கில் அல்லது வடமொழியிற்தான் தம் பாட்டுத் திறத்தினைக் காட்ட முயல்வர். தமிழிற் பாடும்படி வலிந்து வேண்டினாற் தான் தமிழில் சில வேளைகளில் பாடமுயல்வர்.

நாம் தமிழர், நாம் ஒரு தனி இனம், எமக்கென்று ஒரு தனி மொழி, தனிப்பண்பாடு தனி இசை உண்டென்றெல்லாம் பெருமை பேசுகிறோம். எனினும் பரந்த நோக்கு விரிந்த உளப்பாங்கு என்ற பேரில் எம் இனத்தின் தனி இயல்பும் தனி வாழ்வியல் முறையும், பூண்டோடு அழிந்தொழியும் தன்மையில் ஒழுகுகிறோம். இதைத்தான் தமிழ் இசை இயக்கத்தின் முதன்மைத் தலைவர்களுள் ஒருவராய் விளங்கிய ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் ஒருமுறை உள்ளம் நொந்து பின்வருமாறு கூறினர். "தமிழருக்கு தேசியமொழி என்றால் இந்தி; உலகமொழி என்றால் ஆங்கிலம்; வழிபாடு என்றால் வடமொழி; இசை என்றால் தெலுங்கு; மற்றும் எம் உரையாடலிற்கூட எல்லையற்ற பிறமொழிக் கலப்பு. இந்நிலையில் நம் இனத்தின் தனித்தன்மையை (Individuality) பாதுகாக்க வேண்டும், என்ற விழிப்புணர்ச்சி - மறுமலர்ச்சி தோன்றியுள்ளதை யாம் மறுக்கமுடியாதெனினும் இவ்வுணர்ச்சி எம் இனத்தின் நிலைத்த நல்வாழ்விற்கு ஏற்ற முறையில் விரிந்து பரவவில்லை என்பதை யாம் ஏற்றேயாக வேண்டும்."

இசையினால் ஆட்கொள்ளப் படுகிற பண்பு மானிட இனத்தின் பொது இயல்பாய் அமையினும் தமிழ் இனத்தைப் பொறுத்தவரை இசைக்கு எம் இனம் மிகச் சிறந்தநிலையினைக் கொடுத்துள்ளதென்பதை தமிழ் இலக்கியங்கள் ஊடாக அறிகிறோம். இசை உணர்ச்சி தமிழனோடு கூடப்பிறந்த உணர்ச்சி என்று கூறினாற் கூட மிகையாகாது. தமிழனின் மணவினை, பிணவினை ஆகிய இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் சரி குழந்தையை "ஆராரோ ஆர் இவரோ"

என்று தாலாட்டி, ஓராட்டுகிற பாடலிலும் சரி தமிழ் இசையின் மணம் கமழ்ந்திருப்பதைக் காணலாம்.

குறிஞ்சி பாலை, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களுக்கும் ஐவகைப் பண்கள் அமைத்து இசையோடு வாழ்ந்தான் எம் பண்டைய தமிழன் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்ருய் அமையும். பின் எழுந்த இளங்கோவின் "சிலம்பு" திருத்தக்க தேவரின் சீவக சிந்தாமணி, தேனூறும் மூவர் தேவாரம், மணிவாசகரின் திருவாசகம், சேக்கிழாரின் பெரியபுராணம், இவற்றினை அடுத்து எழுந்த பனுவல்கள் (பிரபந்தங்கள்) குமரகுருபரர், அருணகிரிநாதர் ஆகியோரின் பக்திப் பாடல்கள் எல்லாம் தமிழில் இசை வளர்ந்த பெருமையினை இனிது எடுத்து இயம்பி நிற்கும். இனி அண்மைக்காலத்தில் வாழ்ந்து மறைந்த இராமலிங்க வள்ளலாரின் அருட்பாக்கள் வேதநாயகம் பிள்ளையின் கீர்த்தனைகள், கோபாலகிருஷ்ண பாரதியாரின், நந்தனர் பரித்திரம் பாரதியாரின் தேசியப்பாடல்கள். கவிமணியின் தமிழ்ப் பாடல்கள், இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் பாரதிதாசன், நாமக்கல்கவிஞர் தண்டபாணி தேசிகர் ஆகியோரின் இன்னிசைப் பாடல்கள், தமிழில் இசை இல்லை என்று கூறும் அறிவிலிகளுக்கு நல்ல அறை கூவலாய் அமைகின்றன. மேற்குறித்த இவற்ருேடு வீறுபுகழ் விபுலானந்த அடிகள் யாத்த யாழ்நூலும் பண்டைத் தமிழரின் பாங்கான இசை உணர்ச்சியை, தேர்ச்சியை உலகிற்கு பறைசாற்றத் துணைபுரிகிறது.

உலகையே படைத்துக் காத்து அழிக்கும் இறைவனையே இன் தமிழ் இசை ஈர்த்து விடுகின்றது. "நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்ற கூற்றும் "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்ற அப்பர் அருள் மொழியும். "பைந்தமிழ்ப் பின் சென்றபச்சைப்பசுங்கொண்ட" என்றபாவும் தமிழ்இசையின் தனிச் சிறப்பை, உளம் உருக்கும் உயர்வினை எடுத்துக் காட்டுகின்றன.

ஆதலால் இனியாவது யாம் பொருளற்றபாட்டுக்களைப்புத்தமுது என்று போற்றிக் கைத்தாளமிடாது இருளுக்குள் சித்திரத்தின் திறன் காண முயலும் பேதைகளாக மாருது எந்தமிழில் இசை யில்லை எந்தாய்க்கே உடையில்லை என்று உரைத்து தமிழின் தன்மானத்தை விற்று வாய்ச்சோற்றை பெரிதென்றுஎண்ணி,வேற்று மொழியில் இசைபாட முயல்கின்ற வேட்கையினைத்துறந்து. குருடும். குருடும்,குருடாட்டம் ஆடி குழிவிழும் நிலையினை நீக்கி, இன்ப உணர்ச்சி இனிய தமிழ் இசைக்கே உண்டென்பதை உணர்ந்து "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து" சுவைக்கும் நல்ல தமிழ் இசையாளராக சுவைஞராக (ரசிகர்) மாறவேண்டும். அப்பொழுதுதான் நானிலத்தார் தமிழ் காக்கும் நல்லவர், வல்லவர். என எம்மை வாழ்த்தி வழுத்துவர்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.
—பாரதியார்.

# தங்கமலர் - எழில்
# பொங்கும் மலர் - எங்கள்
# பொங்கல் மலர்.

பார்த்தால் வாங்கத்தூண்டும்.
வாங்கினல் படிக்கத் தூண்டும்.
படித்தால் பாதுகாக்கத் தூண்டும்.

வலிவும் வனப்பும் நிறைந்த வண்ணமலராக வெளிவருகின்றது!

# கலைச்செல்வி பொங்கல் மலர்

இராஜ – அரியரத்தினம்,
சானு,
கனகசெந்திநாதன்,
சு. வே,
தேவன்,
கைலாஸநாதக் குருக்கள்,
மஹாகவி,
இ. தர்மலிங்கம்,
திமிலைத்துமிலன்,
நீலாவணன்,
அம்பி,
உதயணன்,
V. S. அனந்தபத்மநாதன்,
எம். ஏ. எம். சுக்ரி,
அன்புமணி,
செங்கை ஆழியான்,
செம்பியன் செல்வன்,
யாழ்நங்கை,
சத்தியசீலன்,
பஞ்சாட்சரம்,
க. பரராஜசிங்கம்,
சத்யன்,
பொ. சண்முகநாதன்,
முனியப்பதாசன்,
க. த. திருநாவுக்கரசு
தமிழ்ச்செல்வன்,
சிற்பி.

முதலியவர்கள் மலருக்கு மணமூட்டுகின்றனர்.

சானுவின் மூவர்ண அட்டைப்படத்துடன்
**பொங்கலன்றே வெளியாகின்றது.**

## இத்தனைக்கும் விலை 50 சதம் மட்டுமே!

அதிக பிரதிகள் தேவைப்படும் விற்பனையாளர்கள்
உடனே கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:–

**கலைச்செல்வி கிளை அலுவலகம்**
கந்தரோடை : சுன்னுகம்.

# தென்னிந்தியாவும் தொல்லிலங்கையும்

(சென்ற இதழ் 50ம் பக்கத் தொடர்ச்சி)

**க. த. திருநாவுக்கரசு**

## 11 சோழரும் இலங்கையும்

தமிழகத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சோழர் மரபு தலையெடுக்கத் தொடங்கியது. விசயாலயன் வழிவந்த முதற் பராந்தக சோழன் கி. பி. 907ல் சோழ நாட்டில் அரசுரிமை பூண்டான். அவன் பாண்டியநாட்டின்மீது 910ல் படையெடுத்துச் சென்றான். பாண்டிய மன்னனாகிய மூன்றாம் இராசசிம்மன் சோழனை எதிர்க்க இயலாது தோல்வியுற்றான். தோல்வியுற்ற பாண்டிய அரசன் இலங்கையை ஆண்டு வந்த ஐந்தாம் காசிபனைத் தனக்கு உதவிபுரியுமாறு வேண்டினான். அம் மன்னனும் பாண்டியன் வேண்டுகோளுக்கிணங்கி, தனது படைத் தலைவன் சக்க சேனாதிபதியின் கீழ் சிறந்ததொரு படைய அனுப்பி வைத்தான். இரு படைகளும் ஒன்று சேர்ந்து சோழன் பராந்தகனை எதிர்க்கப்புறப்பட்டன. வெள்ளூர் என்னுமிடத்தில் பெரும்போர் நடந்தது. பராந்தகன் வெற்றி பெற்றான். அதனால், பாண்டிநாடு சோழரது ஆட்சிக்குட்பட்டதாயிற்று.

தனது நாட்டை இழந்த இராசசிம்ம பாண்டியன் சிங்கள அரசனிடம் சரண்புகுந்தான். அவ்வரசனின் உதவியைக்கொண்டு தன் நாட்டை மீட்கும் பொருட்டுத் தங்கினான். நான்காம் தப்புலன் (கி. பி 929-934) என்ற அரசன் பாண்டிய நாட்டை மீட்டுத்தரும் நோக்கமின்றி இருந்தமையால், பாண்டியன் இலங்கையில் தங்கியிருப்பதால் பயன் விளையாது என்பதை உணர்ந்தான். தன் முன்னோரிடமிருந்து தனக்குக் கிடைத்துள்ள சுந்தரமுடியையும் பிற அரசச் சின்னங்களையும் இராசசிம்மன், இலங்கை அரசனிடம்கொடுத்து அவற்றைக் காப்பாற்றிப் பிற்காலத்தில் தன்னிடம் சேர்க்குமாறு வேண்டினான். பிறகு பாண்டியன் சேர நாட்டிற்குச் சென்றான்.

பாண்டியநாடு முழுவதையும் பராந்தகன் தன் ஆட்சிக்குட்படுத்திய பிறகு, அந்நாட்டின் தலைநகராகிய மதுரையில் முடிசூட்டுவிழா நடத்துவதற்கு முயன்றபோது, பாண்டியர்க்குரிய முடியும் பிற அரசச் சின்னங்களும் அங்கு இல்லாமற் போனதை அறிந்தான். அவை இலங்கை அரசனிடம் இருப்பதாகத் தெரிந்தவுடன், அவற்றை இலங்கை அரசனிடமிருந்து வாங்கிவருமாறு சிங்களத்திற்குத் தூதர்களை அனுப்பினான் (1). அப்பொழுது சிங்களத்தை

---

1 K. A. N Sastri: Colas, P. 124.

ஆண்டுகொண்டிருந்த நான்காம் உதயன் என்பான் அவற்றைக் கொடுக்க மறுத்தான். அதனல் சின முற்ற பராந்தகன் அவன் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அவற்றைத் தன் ஆற்றலால் கைப்பற்றிக் கொண்டுவரக் கருதினன். அதற்காக இலங்கைக்குப் பெரும் படையொன்றை அனுப்பினன். அங்கு நடந்த போரில் இலங்கைப் படைத்தலைவன் இறந்தான். சோழன் வெற்றிபெறவே, உதயன் வேறு வழியொன்றும் அறியாதவனய் பாண்டியன் கொடுத்துச் சென்ற முடியையும் பிறவற்றையும் எடுத்துக் கொண்டு, இலங்கையின் தென் கிழக்குப் பகுதியாகிய ரோகண நாட்டிற்கு ஓடிவிட்டான். அப்பொருள்களைக் கைப்பற்ற முயன்ற சோழர் படை அங்கு செல்ல இயலாது தன் நாட்டிற்குத் திரும்பியது.

கி. பி. ஒன்பதாம், பத்தாம் நூற்றுண்டுகள் இலங்கையின் வரலாற்றில் 'பொற்காலம்' எனப் போற்றப்படுகின்றன, "பொதுவாக நாட்டின் செழிப்புமிக்க நிலையை இந் நூற்றுண்டுகள் நம் உள்ளத்தே நிலையாகப் பதித்துச் சென்றுள்ளன. முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் மேலெழுந்தவாருகக் காட்சியளிக்கும் அமைதியையும் செழிப்பையும்விட இக்காலத்தில் ஆழ்ந்த அமைதியும், மிகுந்த செழிப்பும் உடையதாகச் சிங்களம் சிறப்புற்றதெனலாம்.' 2

பிற்காலச் சோழப் பேரரசர்களுள் தந்நிகரற்று விளங்கிய இராசராசனும், அவன் மகன் இராசேந்திரனும் இலங்கையின் பெரும்பகுதிகளைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சிக்குக் கீழ்க்கொண்டுவந்தனர். கி. பி. 981ல் இலங்கையின் அரசனுக முடிசூட்டிக் கொண்ட ஐந்தாம் மகிந்தன், இராசராசனுக்குப் பகைவர்களாகிய பாண்டியனுக்கும் சேரனுக்கும் உதவி புரிந்து வந்தான். அதனல், இராசராசன் இலங்கையின்மீது படையெடுத்துச் செல்லவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. அவனுடைய மகன் இராசேந்திரன் மாபெரும் படைக்குத் தலைமை தாங்கி இலங்கையின்மீது படையெடுத்துச்சென்றுன். அந்நிலையில் இலங்கையில் உள்நாட்டுக் குழப்பம் உண்டாயிற்று. அதை அடக்கமுடியாது தத்தளித்த மகிந்தன் ரோகண நாட்டிற்கு ஓடிவிட்டான். அதனல் சோழரின் படை அந்நாட்டின் வட பகுதியை எளிதில் கைப்பற்றிக் கொண்டது. மேலும், அந்நிலப்பரப்பு 'மும்முடி சோழ மண்டலம்' என்று பெயரிடப்பெற்று, இராசராசசோழன் ஆட்சிக்குள்ளாக்கப்பட்டது.

தொன்றுதொட்டு இலங்கையின் தலைநகராக விளங்கிய அனுராதபுரம் சோழரின் படையெடுப்பின்பொழுது அழிக்கப்பட்டது. எனவே, அந்நாட்டின் நடுப்பகுதியில் இருந்தபொலன்நறுவா என்ற நகரம் 'சனநாத மங்கலம்' எனப் பெயரிடப் பட்டுச் சோழர்க்குரிய தலைநகரமாகச் சிறப்புற்றது.

கொழும்பு மாநகர் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பெற்றுள்ள கருங்கற்பாறையொன்றில் 'சோழ மண்டலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு வெளாகாட்டுச் சிறு கூற்ற நல்லூர்க்கிழவன் தாழிகுமரன்

2 H. W Codrngton: A Short History of Ceylon, P. 42

ஈழமான மும்முடி சோழமண்டலத்து மாதோட்டமான ராஜராஜபுரத்து எடுப்பித்த ராஜராஜ ஈசுவரத்து மகாதேவர்க்குச் சந்திராதித்தவல் நிற்க' என்று தொடங்கும் கல்வெட்டுக் காணப்படுகின்றது. அக் கல்வெட்டால் சோழநாட்டுத் தலைவன் ஒருவன் ஈழமண்டலத்தில்மாதோட்ட நகரத்தில் தன் நாட்டு வேந்தன் பெயரால் இராசராசேச்சுரம் என்னும் சிவன்கோயிலை எடுப்பித்து, அதற்கு அர்த்தயாம வழிபாட்டிற்கும், வைகாசித் திருவிழாவிற்கும் நிவந்தமாக இறையிலிநிலம் அளித்த செய்தி புலனாகின்றது. அன்றியும், ஈழமண்டலம் இராசராசன் சிறப்புப் பெயரால், 'மும்முடி சோழ மண்டலம்' என்று அந்நாளில் வழங்கப் பெற்று வந்தது என்பதும்,மாதோட்ட நகரம் 'இராசராசபுரம்' என்றும் மற்றொரு பெயரும் பெற்றிருந்தது என்பதும் அக் கல்வெட்டால் வெளியாகிறது. (3)

சோழரின் தலைநகராக இருந்த பொலநறுவாவில் சிவன் கோவில் ஒன்று கற்றளியாக அமைக்கப் பட்டிருக்கிறது. கி.பி பத்து, பதினோராம் நூற்றாண்டுகளில் கட்டப்பெற்ற சோழர் கோயில்களைப்போல் இக கோயில் அமைந்திருப்பதால் இராசராசன் இதனை எடுப்பித்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்கின்றனர். மேலும், அக்கோயிலுக்கு இராசராசனின் தாயான 'வானவன் மாதேவி'யின் பெயரிடப் பெற்றுள்ளமை,'வானவன்மாதேவீச்சுரம்'என்று அக்கோயில் குறிப்பிடப்படுவதால் தெரியவருகிறது. தஞ்சையில் இராசராசன் எடுப்பித்த பெருவுடையார் கோயிலான இராசராசேச்சுரத்துக்கு இலங்கையில் உள்ள சில ஊர்களை நிவந்தமாக அளித்துள்ளான் என்பது அக்கோயில் கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது.

இராசராபன் காலத்தில் நடந்த இலங்கைப் போரில் தோல்வியுற்று ரோகணத்திற்கு ஓடிய ஐந்தாம் மகிந்தன், சில ஆண்டுகட்குப் பிறகு, சோழர் ஆட்சிக்குட்படாமல் அத்தீவின் தென்கிழக்குக் கோடியிலிருந்த ரோகண நாட்டிலிருந்து பெரும்படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு சோழர்களை எதிர்த்துப் போரிட்டுத்தன் நாட்டைக் கைப்பற்ற முயன்றான். இதனால், கி.பி 1017ல் இராசேந்திரச் சோழன் இலங்கையின்மீது படையெடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. அப்படையெடுப்பில் இலங்கையில் நடந்தபோரில் இராசேந்திரன் வெற்றிபெற்றான். சிங்கள மன்னவர்கட்கு பல தலைமுறைகள் உரிமையுடையதாயிருந்த சிறந்த முடியினையும், அம்மன்னர்களின் தேவியரது அழகிய முடியினையும் கைப்பற்றிக்கொண்டு சோழ நாட்டிற்குத் திரும்பினான். மேலும், மூன்றாம் இராசசிம்ம பாண்டியன், நூறாண்டுகளுக்கு முன்பு இலங்கை அரசனிடத்து அடைக்கலமாக வைத்துச்சென்ற பாண்டியர் முடியையும், அன்னோர்க்குரிய இந்திரன் ஆரத்தையும் இவன் கைப்பற்றிக் கொண்டமை சிறப்புமிக்க செய்தியாகும். மகிந்தன் சோழ நாட்டிற்குக் கைதியாசக் கொண்டுவரப்பட்டான். அவன் பன்னிரண்டு ஆண்டுகள் உயிருட

---

3 தி. வை. ச. பண்டாரத்தார்: பிற்காலச் சோழர் வரலாறு. ப. I. பக். 107

னிருந்து பிறகு இறந்தான். இராசேந்திரனுடைய படையெடுப்பின் பயனாக இலங்கை முழுவதும் சோழரின் ஆட்சிக்குட்பட்டது.

ஐந்தாம் மகிந்தனுடையமகனை காசிபன் என்பவனை இலங்கைமக்கள் மறைவாக வளர்த்து வந்தனர் என்பதும், அவன் தந்தை சோழ நாட்டில் இறந்தவுடன், அவர்கள் அவனைத் தம் அரசனாக ஏற்றுக்கொண்டு சோழ நாட்டுப் படைகளுடன் ஆறு மாதங்கள் போர்புரிந்து, தென்கிழக்கிலுள்ள ரோகண நாட்டைக் கைப்பற்றி விக்கிரமபாகு என்றபெயருடன் கி.பி 1029ல் அவனுக்கு முடிசூட்டினார்கள் என்பதும், அவன் கி.பி 1041 வரையில் அந்நாட்டினை ஆண்டான் என்பதும் மகாவமிசத்தால் அறியப்படுகின்றன.

இராசேந்திரன் ஆட்சிக்கு இலங்கை முழுவதும் சற்றேறக்குறைய பத்து ஆண்டுகள் உட்பட்டிருந்தது. கி. பி. 1029ல் ரோகண நாட்டைக் கைப்பற்றி அரசனான விக்கிரமபாகு சோழர்களோடு போர்புரிந்து இலங்கை முழுவதையும் கைப்பற்றித் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வரவேண்டும் என்ற ஆவல் கொண்டான். எனவே, விக்கிரமபாகு பெரும்படையைத் திரட்டிக் கொண்டிருந்தான். அந்நிலையில் அவன் இறந்துபோனான்.

அவனுக்குப்பின்வந்த அரசர்களும் சோழர் ஆதிக்கத்தை இலங்கையிலிருந்து வெளியேற்றக் கருதினர். அதற்காகப் பல முறை முயன்றனர். இரண்டாம் இராசேந்திர சோழன் (கி.பி 1051–1063) காலத்தில் சோழர்படை ஒன்று இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அப்படைக்கும் சிங்களப் படைக்கும் கடும் போர் நடந்தது. அப்போரில் வீரசலாமேகன் என்ற சிங்களப் படைத்தலைவன் கொல்லப்பட்டான். இலங்கையின் மன்னனாகிய மானாபரணனுடைய பிள்ளைகள் இருவர் போர்க்களத்தில் சிறை பிடிக்கப்பட்டனர்.

எனினும், போரில் தோற்றோடித் தலைமறைவாக வாழ்ந்த விசயபாகு, சில ஆண்டுகட்குப் பிறகு ரோகணத்திலிருந்து மீண்டும் இலங்கையை ஆளத் தொடங்கினான். அவன் ஆட்சிக்கு வந்த நாள் முதல் அயலாருடைய ஆட்சியிலிருந்து தன் தாய் நாடு முழு விடுதலை பெறவேண்டும் என்று எண்ணினான். அதற்கேற்ற முறையில் திட்டமிட்டு வேலை செய்து வந்தான். முதலில் அவன் பொலநறுவையைக் கைப்பற்ற முயன்றான். முயற்சி பலன் அளிக்கவில்லை: அதனால் தன் வாடகிரியில் கோட்டைக் கொத்தளங்கள் அமைத்து, அதை அவன் பலப்படுத்திக் கொண்டான். விசயபாகுவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் கலகமும் குழப்பமும் உண்டாயிற்று. அரும்பாடுபட்டு அவற்றை அடக்கினான். இந்நிலையில் சோழ நாட்டில் முதலாம் குலோத்துங்கன் அரசனாவதற்கு முன்பிருந்த அமைதியற்ற அரசியல்நிலை விசயபாகுவிற்கு ஏற்றதொரு சூழ்நிலையாக அமைந்தது.

முதலாம் குலோத்துங்கன் கி.பி 1070ல் அரசுகட்டில் ஏறினான். சிங்களவர்கள் ரோகணத்திலிருந்த தங்கள் அரசகுமாரனாகிய விசயபாகு என்பவனை அழைத்துவந்து கி. பி 1073ல் முடிசூட்டி இலங்கை முழுவதற்கும் அவனை அரசனாக்கினார்கள்.

அங்கிருந்த சோழரின் படைக்கும் சிங்கள அரசனுக்கும் பெரும்போர் நடந்தது. இறுதியில் அவ்வரசனே வெற்றிபெற்ருன். பிறகு சோழநாட்டிலிருந்து சென்ற பெரும்படை ஒன்று அனுராதபுரத்தில் விசயபாகுவைத் தோற்ருேடச் செய்தது. அந் நகரைச் சோழநாட்டுப்படை கைப்பற்றிக் கொண்டது. அப்படைக்குத் தலைவனுகச் சென்றவன் கருணுகரத்தொண்டமான் என்ற மாவீரனுவன். அவன் வென்ற நாட்டில் கருணுகரத் தொண்டைமான் ஆற்றை வெட்டினுன். இப்பொழுது உரும்பராயிலிருக்கும் கருணுகரப் பிள்ளையார் கோயிலையும் அவன் கட்டினுன் என்பர்.

போரில் தோல்வியுற்ற விசயபாகு தக்க அரணவாய்ந்த இடமொன்றைத் தேடி, அங்கிருந்து சோழரை எதிர்த்துப் போரிடுவதற்கு முயன்று கொண்டிருந்தான், தான் திட்டமிட்டபடி பொலநறுவா, அனுராதபுரம் ஆகிய இரு நகரங்களிலும் சோழரைத் தாக்குவதற்கு இருபெரும் படைகளை அனுப்பியதோடு, தானும் அவ்விடங்கட்கு வேறு வழியாகச் சென்ருன். பொலநறுவாவில் பெரும் போர் நடந்தது. இறுதியில் சிங்கள மன்னனுல் அந்நகரம் கைப்பற்றப் பட்டது. பிறிதோர் சிங்களப்படை கடும் போர் புரிந்து அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டது சோழர் படை இரு போரிலும் பெருந் தோல்வியுற்றது. வாகை சூடிய விசயபாகு இலங்கை முழுவதற்கும் அரசனுனுன். அன்றுமுதல் அவனே அந் நாட்டை ஆண்டுவரலானுன், இதனுல், முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின் தொடக்கத்திலேயே ஈழமண்டலத்தைச் சோழ மன்னர்இழந்தமை விளக்கமுறுகிறது. இராசராசன்'கால முதல் சோழப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய இலங்கை, இக்காலத்தில் ஒரு விடுதலை பெற்ற சுதந்திர நாடாக மாறியது.

விசயபாகு அரசனுனவுடன் பொலநறுவாவிற்குச் சோழர்கள் சூட்டிய பெயரை மாற்றி, 'விசயராசபுரம்' என்று பெயரிட்டான். கன்னேசிநாட்டு அரசன் ஜகதிபாலனுடைய மகளான லீலாவதியை விசயபாகு திருமணம் செய்துகொண்டான். அவன் பாண்டிய இளவரசன் ஒருவனுக்குத் தனது தங்கை மித்திரையைத் திருமணம் செய்து கொடுத்தான், விசயபாகு புத்தசமய மடங்களையும் கோயில்களையும் புதுப்பித்தான். மேலும் புத்தர் பெருமானின் 'திருப்பல்லிற்கு' நுவரகிரியில் (Nuvaragiri) ஒரு கோயில் எடுப்பித்தான். இவன் மேலைச் சாளுக்கிய வேந்தனுன ஆரும் விக்கிரமாதித்தனுக்கு ஒரு தூதர் குழுவினை அனுப்பினுன். சோழவேந்தன் அத்தூதர்களின் கைகால்களை வாங்கிமுடமாக்கி அனுப்பினுன். இதைக்கண்டு சினமுற்ற விசயபாகு சோழர்கள்மீது படையெடுத்தான். விசயபாகுவின் வேளக்காரப் படையிலிருந்த தமிழர்கள், தமிழர்களான சோழரோடு போர்புரிய விரும்பாது கலகமும் குழப்பமும் செய்தனர். அவர்கள் அரசனது அரண்மனையைக் கொளுத்தினர். அரசன் உயிர் தப்பினுல் போது மென்று ஓடினுன். சிறிது காலத்திற்கெல்லாம் அவன் பெரும் படையுடன் வந்து கலகக்காரர்களைத் தோற்கடித்து, முக்கிய தலைவர்களைத் தூக்கிலிட்டான். மீண்டும் விசயபாகு

இலங்கையின் அரசனானான். அவன் ஐம்பதாண்டுகள் ஆட்சிபுரிந்தான். ஆதம் சிகரத்திற்கு (Adam's Peak) செல்லும் நெடுஞ்சாலையின் பலவிடங்களில் வழிப் போக்கர்கள் தங்குவதற்கு விடுதிகள் கட்டினான். அவ்விடுதிகளில் வந்து தங்குவோருக்கு உண்வளிப்பதற்காக ஓர் ஊரையே நன்கொடையாக அவன் வழங்கினான். இச்செய்தியை அவனுடைய ஆட்சியாண்டின் இறுதிக் கல்வெட்டொன்று எடுத்தியம்புகிறது.

விசயபாகுவிற்குப் பிறகு அவனுடைய தம்பி செயபாகு அரசனானான். இந்நிலையில் அரசகுடும்பத்தில் கலகம் உண்டாயிற்று. ரோகணத்தின் அரசப் பிரதிநிதியாக இருந்த விக்கிரமபாகு நாட்டில் இல்லாத சமயத்தில், பாண்டிய இளவரசனுக்கும் விசயபாகுவின் தங்கை மித்திரைக்கும் பிறந்த மூன்று பிள்ளைகளுள் மானாபரணன் என்ற வீரபாகுவை இலங்கையின் இளவரசனாக்கினான். இச்செயல் தொன்று தொட்டு இருந்துவரும் மரபிற்கு மாறாக அமைந்தது. ஆளும் அரசனது உடன் பிறந்தாரோ, மகனோ இளவரசு பட்டம் சூட்டப்படவேண்டியது முறை. இதற்கு நேர்மாறாக நாடாளும் அரசனின் தங்கை மகன் இளவரசு பட்டம் கட்டப் பெற்றான். சிறிது காலத்திற்கெல்லாம் செயபாகுவை எதிர்த்து விக்கிரமபாகு போரிட்டு வெற்றி பெற்றான்.

(தொடரும்)



# ❁ தீப்பொறிகள் ❁

## இ. சிவானந்தன்

அந்தக் குறுக்குத் தெருவழியாக நகர்ந்து சென்ற ஊர்வலத்தின் மத்தியில் அசையும் வண்டிலின் அருகே நானும் நகர்கிறேன். மக்களின் அடியொலியோ வண்டிற் சக்கரத்தின் அசைவின் ஒலியோ அங்கு தொனிக்கவில்லை, பறவைகளின் ஒலி மட்டும் எம்மை ஏளனம் செய்கிறது. தெருவின் இருகோடியிலும் வளர்ச்சி பெற்ற மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசியெழுப்பும் ஒலி நன்ருகக் கேட்கிறது. அவை காற்றின் பக்கம் வளைந்து நிமிர்ந்து மனிதகுலத்தைக் கிண்டல் செய்கின்றன. ஊர்வலத்தைக் கண்டு திகில் கொண்ட அணிற்பிள்ளைகள் மாங்கனி சுவைப்பதையும் வெறுத்து கீச்சிடும் குரல் எழுப்பிக் குதிக்கின்றன. வெய்யிலின் கொடுமையை சிறிதும் பொருட்படுத்தாது நெற்பயிர்கள் தங்கள் பசும் துளிரிலைகளை அசைத்து மகிழ்கின்றன, அவை தங்கள் பிற்காலத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் 'கிண்' ணெனும் ஒலி எழுப்பிக் கொண்டிருக்கின்றன.

என் உள்ளத்தில் என்றுமில்லாத உணர்வுகள்.

வலுவிழந்து வதைக்கும் உணர்வுகள்.

கண்கள் இடையிடையே பின்னும் முன்னும் சுழல்கின்றன.

நல்லூர் தேர்த்திருவிழாக் காட்சி என்கண்கள் முன் தோன்றி மறைகிறது. தேர்த்திருவிழாவில் மக்கள் குரல் நிறைந்திருக்குமே......இங்கு எல்லோரும் ஊமைகளோ?...... அல்லது நான் மட்டும் செவிடோ?

இவர்களின் முகங்களிற் சோகம் படிந்திருக்கிறது.

சோகத்தின் பிரதிபலிப்பு மௌனம்.

இப்போ என் கண்கள் என் முன் நகரும் வண்டியிற் பதிகின்றன. அங்கே வைத்திருந்த முதிரைப் பெட்டி கண்களை ஈர்க்கின்றது, இதய விம்மலுக்கிடையில் அப்பெட்டி பெரும் சம்மட்டியாக மாறி என் இருதயத்தில் மோதப்படுகிறது.

எவ்வளவு அழகான வண்டி... அழகான பெட்டி......அழகு......

அழகு!

ஐயோ, அதை இனிமேல் நான் காணவே முடியாது. என் அழகு செத்துவிட்டது...என் அழகு......என் கமலம்...

'ஐயோ கமலம்!'

உள்ளம் குமுறுகிறது......

மயக்கநிலை தொடர்கிறது......

கைகள் வண்டியின் சட்டமொன்றை ஆதரவுதேடிப் பற்றுகின்றன. கண்களிலிருந்து நீர்த்துளிகள் கசிகின்றன.

உடலும் உள்ளமும் எங்கோ பறக்கின்றன,

❁

அதோ......

நான் பாடசாலையால் வருவதை எதிர்பார்த்தவண்ணம் வாசலில் நிற்கிருள் என் கமலம். வெளிப்படலைத் தூணுடன் சாய்ந்தவண்ணம் என்னைப் பருகுகிருள். அவள் முகத்தில் புன்னகைப் பூக்கள் நெளிந்தோடுகின்றன. அந்தப்பூக்களிற்ருன் எத்

துணை கவர்சி. கைகள் இரண்டையும் இடுப்பில் மாட்டியவாறு கால் பெருவிரலால் நிலத்தைச் சுரண்டுகிறாள்.

என் உள்ளம் இன்பஸ்பரிசத்தில் அமிழ்கிறது.

கால்கள் விரைகின்றன.

''அத்தான், என்ன கொஞ்சம் பிந்திப் போயிட்டீங்க"—மழலை கொஞ்சும் சொற்கள் என் உணர்ச்சியை அதிகரிக்கின்றன; கைகள் அவளை அணைக்கின்றன.

"என்ன பிந்தினது? ஆகமூன்று நிமிடந்தானே லேட்" என் கைப்பிடி இறுகிறது; அவள் திமுறுகிறாள்.

"ஐயோ மாமி வீட்டிலை இருக்கா, ஆராலும் பார்த்தாலும்" கைப்பிடி தளர்ந்து அவள் உதரங்களிற் படிகிறது. என்முன் பாய்ந்தோடுகிறாள்.

அறையுட் புகுந்த என்னைத் தழுவியவாறு உட்காரவைக்கிறாள்.

''என்ன நல்லாய் களைச்சிட்டீங்க போலிருக்கு" வாய் பேசுகிறது. கைகள் என் உடுப்பைக் கழைவதில் முனைகின்றன.

"அப்பிடியே படுத்துக் கொள்ளுங்கோ. கோப்பி கொண்டு வாறன்''

பாய்தோடி மறைகிறாள்.

❁

கட்டிலிற் படுத்திருந்த என் கண்கள் யன்னலூடாக செல்கின்றன. பூரண சந்திரனின் பொலிவு என்னை ஈர்க்கின்றது.. அங்கே களங்கமென்பதே இல்லை. பரிசுத்தத்தின் உருவமே காட்சியளிக்கிறது.

என் கமலம் தான் அங்கே கண் வெட்டுகிறாள்.

ஐயோ, கருமுகிலொன்று என் கமலத்தை மூடுகிறதே!

"ஐயோ கமலம்''

குரலின் எதிரொலி என் காதுகளில் உறைகின்றது.

''என்னத்தான் ......என்ன''

சொற்கள் தடுமாற என்முன்... என் அருகில் வருகிறாள் கமலம்.

நெஞ்சின் வேதனை அவள் முகத்தில் உருவெடுக்கிறது.

''வந்திட்டியா கமலம், இங்கே வா இப்படியிரு"

உள்ளம் என் உடலை எழுப்ப முயல்கிறது, உணர்வு என்னைத் தடுக்கின்றது.

''வேண்டாமத்தான், டாக்டர் உடம்பை அசைக்கக் கூடாதெண்டு சொன்னவரல்லவா"

கனிவுக் குரல் பிறப்பித்த கட்டளை என் ஆவலை நிலை தளரச் செய்கிறது.

அவள் குரலிற் தளர்ச்சி.

கண்களில் முத்துமுத்தாக உருளும் நீர்த்துளிகள் என் நெஞ்சில் விழுந்து மடிகின்றன.

"அழாதை கமலம்... எனக்கு ஒன்றுமாகாது...என்னம் கொஞ்ச நாளிற் பாரேன் உன்னை என்ன பாடு படுத்திறன் என்று......"

அவள் வதனத்தில் புன்னகை நெளிந் தோடுகின்றது. நாணம் தலையை மடக்கிறது.

''......இல்லாட்டி கல்யாணமாகி நாலுமாதம் கூட ஆகவில்லை, வருத்தம் துன்பம் வந்திட்டுதென்று துக்கப் படுகிறியா''

என் குரலில் ஒரு பயங்கர உணர்வு.

''அ......அப்பிடி ஒன்றுமில்லை''

சொற்களிற் பதற்றமும் பயங்கரமும் கலந்திருக்கின்றன. கரங்கள் என் நெற்றியை வருடுகின்றன.

''அம்மா கமலம்"

''அதோ மாமி கூப்பிடுகிரு"

பண்பும் பற்றும் அவளை அங்கிருந்து நகர்த்துகின்றன. அவள் சென்ற திசையைப் பார்த்தவண்ணம் விம்மி விம்மி அழுகிறேன்.

## ''அத்தான்''

அதோ என்னைக் கூப்பிட்டவாறு என் கமலம் என்னிடம் விரைகிருள். கைகள் இரண்டையும் இறுக்கப்பற்றி என்னை எங்கோ இழுக்கிருள். அவளின் முகத்திற்ருன் எத்தனை அழகு...... கடவுளே அவை என்றும் நிலைக்கவேண்டும்.

அன்புப் பிணைப்பு என்னை இயக்குகின்றது.

''அத்தான் இண்டைக்கு ஒரு புதினம் சொல்லப்போறன்''

''அடேயப்பா என்ன அப்படி ஆளை மிஞ்சினது''

''நீங்க அதைக் கேட்டீங்களோ இந்த உலகத்தையே அடைஞ்ச மாதிரி இருக்கும்.

என்கழுத்தை இருகைகளாலும் பிணைத்துக் காதுக்குள் ஏதோ குசுகுசுக்கிருள். எழுந்து குதித்தவள் அங்கிருந்து மறைகிருள். என்னுள்ளம் இன்ப வெள்ளத்தில் அமிழ்கின்றது.

எங்கள் அன்புத் தெய்வத்தைக் காண இன்பச்சிறகு பெற்றுப் பறக்கிறேம்.



### சீ......!

ஒரு பெண் தலைவிரி கோலமாக, தன்னைக் காதலித்து கைவிட்டவனிடம் ஓடிவந்தாள். ஆத்திரத்துடன், ''அடா,நம்பிக்கைத் துரோகி, நயவஞ்சகா, ஏமாற்றுக்காரா, சீனுக்காரா...'' என்று திட்டத் தொடங்கினுள்.

—தமிழன் குரல்

''அத்தான் இங்கை வாங்க இங்கை இருக்கிறன்''

சிந்தனை கலைய என் கண்கள் திரும்புகின்றன

''சீ......பெலத்துச் சத்தம் போடாதை...இது வீடல்ல, பிரசவ ஆஸ்பத்திரி''

கால்கள் அவள் படுத்திருந்த கட்டிலை நாடுகின்றன.

''டாக்டர் என்ன சொன்ஞர் கமலம்'

''பெரும்பாலும் இன்றிரவென்கிருர். யாருக்குத்தெரியும்''

"சரி இப்ப சொல்லு பார்ப்பம் தங்கச்சியோ தம்பியோ வென்று''

''நான் தம்பியென்று அப்பவே சொல்லிப்போட்டனே"

''எனக்கா உனக்கா வெற்றியென்று இப்பதெரியும்தானே"

''அத்தான் தம்பியென்ருல் என்ன பெயர் வைக்கிறது"

''அ......அ......தெல்லாம் அப்புறம் பார்ப்பம்"

என்குரலிற் தடுதளிப்பும்

**வழ வழா...!**

ஆசிரியர்: ஏன் ஸார்! நீங்க எழுதிய கதை 'வழ வழா'ன்னு இருக்கின்றதே?

எழுத்தாளர்: ஆமா ஸார்! 'ஆர்ட் பேப்பரி'ல் எழுதியிருக்கிறேன், அதுதான் காரணம்!

தளர்ச்சியும். சிந்தையெல்லாம் இனமறியா உணர்வுகள், உடலெல்லாம் உள்ளமறியாத நடுக்கம்.

கமலத்தின் கையை இறுகப் பற்றியபடி நிற்கிறேன்.

என் கண்கள் பிரசவ அறையின் கதவுகளிற் பதிகின்றன. உள்ளத்தை உணர்வு சூழ்ந்து அங்குமிங்கும் உலுப்புகின்றது உடல் இருக்கச் சொல்கிறது. உள்ளம் நடக்கச் சொல்கிறது, கதவுகள் அசையும்போதெல்லாம் என் இருதயமும் அசைகிறது. கண்கள் கதவு வழியாகச் சுழரும் தாதிமார்களில்வட்ட மிடுகின்றன. அவர்களைக் காணும்தோறும் என் கால்கள் தாவமுனைவது எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது.

மனதில் திகிலும் பரபரப்பும் கொடிவிட்டுப் படர்கின்றன.

பெரிய டாக்டர் அதோ வருகிறார். அவர் முகத்தில் சவக்களை சொட்டுகிறது.

துன்பம் சுழல்கிறது.

'எல்லாம் முடிந்ததாக்கும்!?'

இதயம் எதையோ காணத் தவிக்கிறது.

இன்ப வாவியுட் குதிக்கிறது.

''ஐயோ கமலம்'' அம்மாவின் குரல்.

என் இதயம் சுக்கு நூறாக வெடிக்கிறது.

உடல் அறையை நோக்கி விரைகின்றது.

கரங்கள் தடுத்து நிறுத்துகின்றன.

மயக்கநிலை.

சுவரிற் சிறிது சிறிதாக உடல் சாய்கிறது.

கண்கள் விரிகின்றன. எங்கும் ஓர் கலங்கிய நிலை

அதோ...

ஐயோ...

என் கமலமேதான்... ஆழ்ந்த தூக்கத்திலிருக்கின்றாள்.

முகத்தின் அழகு குறையவில்லை.

உடலின் வனப்பு மறையவில்லை.

என்னைப் பருகும் கண்கள் மூடியிருந்தன.

செடிமட்டும் அங்கே கிடக்கிறது. மலரைக் காணவில்லை.

மழை மறைகிறது. துவானம் ஓயவில்லை.

கண்களின் கசிவை என் கைகள் தடுக்க முயற்சிக்கின்றன.

''டொக் டொக் டொக் டொக்''

வண்டிற் சக்கரம் கிடங்கில்

விழுந்து எழுகிறது. என் கைகள் வண்டியைப் பற்றி இறுகப் பிடிக்கின்றன கண்கள் கலக்க நிலையிற் காண்பதைக் காட்ட மறுக்கின்றன, இதயத்தில் எழுந்த தீப்பொறிகள் உடலெங்கும் பரவுகின்றன.

'கமலம்...கமலம்"

இதயக்குமுறல்.

"கமலம்... இங்கே உள்ளவர்கள் தங்கள் ஆயுள் பூராவும் காணு ததை நான் பத்து மாதத்தில் உன்னிடத்தில் கண்டுவிட்டேன். என் கமலம் எனக்கு எல்லாவற்றையும் தந்துவிட்டாள்....

அவள் என்றும் என்னுடன் வாழ்கிருள்.

நான் அவளுக்காக வாழ வேண்டும்.

மலர் விழுந்ததென்று மரத்தின் பிடியிலிருக்கும் மறு மலரும் விழுவதில்லை. விதியென்னும் புயலிற் சிக்கியது ஒன்று, அதிலிருந்து பாது காக்கப்படுவது மற்ருென்று.

கால்கள் உரம் பெறுகின்றன.

பிரேத ஊர்வலம் தொடர்கிறது.

# குயிலே நீ கூவு

## "பரணி ஆறுமுகன்"

குயிலே கொஞ்சம் நில் லிங்கே
கொஞ்சும் குரலில் பாடொ ருகால்
நெஞ்சம் நெகிழ்க்கு உன் குரலில்
நீயும் நானும் சுகம் காண்போம்.

வஞ்ச மனிதர் வாழ்கின் ருர்-அவர்
கஞ்ச மனமுங் கரை ந் திடவே
செஞ்சொ லமுது சுவை கூட்டித்
தேனுய்ப் பாகாய்ப் பாடு நிதம்

வண்ணம் உனது வடி வழகு
வையம் உனது வாழ் வழகு
எண்ணம் உனது நினை வழகு
இதயம் உனது குர லழகு

கூ கூ என்றே கூறுகிருய்
குறையோ நிறையோ சொல் குயிலே
குறையில் நிறையைக் காண்பாயேல்
குயிலே சொர்க்கம் வேறுண்டோ!

# காதல் கடிதம்

## எஸ். ராஜகோபாலன்

"நளினி!" என்றுஆவல் ததும்ப அழைத்தவாறே வீட்டினுள் நுழைந்தான் நடராஜன்.

ஆயிரம் வால்ட் புன்னகையை வீசியவண்ணம் தனக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பாள்என்று அடுக்கடுக்கான கற்பனைகளையெல்லாம் அள்ளிக் கட்டிக்கொண்டு வந்தவனுக்கு வெறிச்சோடிக் கிடந்த வாசலில் ஏமாற்றமே காத்துக் கிடந்தது. நாள்தோறும் அழகே உருவெடுத்தாற்போன்று வாசலில் நின்று வரவேற்கும் அவன் இல்லத்தரசியை அன்று ஏனோ காணவில்லை. சூரியன் கிழக்கே உதித்தாலும், இல்லை... இல்லை... மேற்கே உதித்தாலும் தனக்காகக் காத்திருக்கத் தவறாத மனைவியை அன்று காணாதது நடராஜனுக்கு என்னவோபோலிருந்தது.

வழக்கமாக 'நள்!' என்று அழைப்பானே, அதுபோல் அழைக்கவும் தோன்றவில்லை. விடுவிடென்று உள்ளே நுழைந்தான். மேசையின்மேல் மார்க்கோனியின் சிருஷ்டி மௌனமாய்க் கிடந்தது. வர்த்தக ஒலிபரப்புக்கு அன்று அரோகரா! என்ன நேர்ந்ததோ! எப்படி நேர்ந்ததோ! என்று நடராஜனிடம் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் விழுந்தடித்துக்கொண்டு தோன்றின. ஒருவேளை... என்ற சந்தேகத்திற்கும் இடமில்லாமல் அறையினுள் நுழைந்தான்.

திடீரென்று அண்டசராசரங்களெல்லாம் தகர்த்துவிடும்படியாக ஒரு அணுகுண்டு வெடித்தது. சீன இந்திய எல்லையில் வெடித்த குண்டு அல்ல. நடராஜனின் இதயந்தான் அப்படி வெடித்துத் தவிடுபொடியாகி அதில் கொஞ்சம் அவனுடைய பொடி டப்பிக்குள்ளும் புகுந்துவிட்டது.

நடராஜன் கண்ணைக் கசக்கு கசக்கென்று கசக்கிவிட்டுப் பார்த்தான். சந்தேகமேயில்லை, கட்டிலில் அமர்ந்திருந்தது: காளி, அம்மன், வடபத்திரை எல்லாம் ஒருங்கே உருவெடுத்த அவனுடைய ஆசை மனைவியேதான். ஜி. வரலக்ஷ்மியின் கைகேயி மேக்கப் மண்ணைக் கவ்விவிட்டது. நெற்றியில் மங்களகரமான சாந்துப்பொட்டையே காணோம். சம்பளத்தின் அரைவாசியை சாந்துப்பொட்டே விழுங்கி ஏப்பம் விடுவதை அவன் எந்தனையோமுறை கண்டு பொருமியிருக்கிறான். விரித்த கூந்தல் கட்டிலிலிருந்து இறங்கித் தவழ்ந்துபோய் யன்னலடியில் காற்று வாங்கிக்கொண்டிருந்தது. அவ்வளவு நீண்ட கூந்தலை ரசிப்பதிலேயே மூழ்கிவிட்டான்.

சில நிமிடங்களுக்குப் பிறகுதான் உணர்வு வந்தது. தன்னுடைய ஏக்கம், தவிப்பு, அன்பு, ஆத்திரம் அனுதாபம், காதல், கத்தரிக்காய் ஆகிய இன்னோரன்ன உணர்ச்சிகளையெல்லாம் ஒன்றாக மூட்டை கட்டிவைக்க முடியாமல் தவித்தான். ஐயகோ! காதல் கலியாணம் செய்து கால்வருடங்கூட ஆகவில்லையே அதற்குள்ளாக இந்தக் கதியா? வழியெல்லாம், வீட்டில் பேசவேண்டு

மென்று நெட்டுருப்பண்ணிக் கொண்டுவந்த காதல் வசனங்க ளெல்லாம் காற்ருேடு பறந்துவிடு வதா? அடுக்குமா இந்த அநியாயம்? என்றெல்லாம் குமுறினன்.

இன்றைக்குப் புது நாணயமாய் என்ன நடந்தது? துணிச்சலே வர வழைப்பதற்காக ஒரு சிறங்கை பொடியை உறிஞ்சிவிட்டு அவளே மெல்ல நெருங்கினன் அவளுடைய தோளில் கைவைத்து அன்புடன் 'நள்' என்று அழைத்தான். எள் என்றவுடன் எண்ணெயாகி நிற்ப வள் நள் என்றவுடன நாயகனே என்பாளல்லவா? என்று எப்போ தோ படித்த எதுகைமோனேயோடு அவன் கற்பனே விரிந்தது. என்ன பேசியுமென்ன, அவள் திரும்பி அன் போடு ஒரே ஒரு வார்த்தை! மூச்! பேசக்கூடாது!

என்ருலும் நடராஜன் துணிச் சலேக் கைவிடவில்லே. "நளினி! என்ன நடந்தது? வீட்டிலே கறிக்கு உப்பில்லேயா? வாளி கிணற்றுக்குள் விழுந்துவிட்டதா? அம்மா இங்கே வந்து உன் உடம்பைப்பற்றி ஏதா வது துப்பறிந்தாளா?" என்று கேள் விக்கணேகளேயெல்லாம் தொடுத்துக் கொண்டே போனன். எதற்கும் பதில் இல்லே. இனியும் இந்த லேனில் போனல் சரிப்பட்டு வராது என்று எண்ணிக்கொண்டு அவள் தோள்களேக் கையால் வளேத்துக் கொண்டான்: ஆதங்கம் நிறைந்த குரலில் 'நளினி!' என்ருன். என்னே ஏமாற்றம். அவனுடைய கையைத் தட்டிவிட்டு வெடுக்கென்று எழுந்து அப்பாற் சென்றுவிட்டாள் அவள். கூடவே அவளுடைய நீண்ட கூந் தலும் இழுபட்டுக்கொண்டு சென் றது! சிதம்பரம் ஜெயராமனின் அச ரீப் பாட்டு ஒன்று இல்லாதது தான் குறை!

நடராஜனுக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லே. நிலேமை யைக் காணக்காண அவனிட மிருந்து அன்பு ஆசை அடக்கம் எல்லாம் பறந்தோடி ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது, "என்ன விஷயம் என்று சொல்லா மல் இப்படி மூன்று முழத்துக்கு மண்ணேயை இறக்கிக்கொண்டு நின் ருல் எனக்கென்ன தெரியும், எதை யாவது சொன்னல்தானே புரியும்" என்று பொரிந்து தள்ளினன். என்ரு லும் அவன் தன்னிடமிருந்து எதிர் பார்த்த கோபம் அந்த வாக்கியத் தில் பிரதிபலிக்கவில்லே. என்ன செய்வது, எல்லாவற்றையும் எப் போதோ அவளுக்கு அர்ப்பணித்து விட்டானே!

திடீரென்று எங்கிருந்தோ ஒரு கசங்கிய காகிதம் வந்து அவ னுடைய மடியில் விழுந்தது. மப்புக் குப்பிறகு முழக்கம் வந்தேதீரும் என்பது அவன் உலகியலில் அனு பவரீதியாக அறிந்த உண்மை.

## ஆ... சிரியர்

தந்தை: மணி! உன்னுடைய ஆசிரியரை உனக்குப் பிடித்ததா? அவர் எப்படி?

மணி: அவர் சுத்த மோசம் அப்பா. அவருக்கு ஒன்றுமே தெரியாது. எல்லாக் கேள்வி களேயும் அடிக்கடி பையன்களி டம் கேட்டே விடையைத் தெரிந்துகொள்வார்!

ஆனுல் இங்கேயோ முழக்கம் இல்லே, மழையே வந்துவிட்டது; தாரை தாரையாகக் கொட்டியது. நடராஜன் நளினியின் கழுத்தில் முடிச்சைப் போடும்போதே தன் மனதில் ஆணித்தரமாக ஏற்படுத்திக்கொண்ட பத்துக் கட்டளேகளில் அவளே என்றுமே அழவைப்பதில்லே என்பதும் ஒன்ருக இருந்தது. ஆனுல் இன்ருே அது அவன் காலே வாரிவிட அவனே அழவேண்டிய நிலே வந்துவிட்டது. நடாராஜன் மிக மிகப் பரிதாபத்தோடு அவளே நோக்கினுன்.

மடியில் கிடந்த காகிதம் கலகல வென்று கைகொட்டிச் சிரிப்பதைக் கேட்டுஅதனேப் பார்த்து ஒரு முறைப்பு முறைத்தான். இவ்வளவு ஆர்ப்பாட்டங்களேயும் அந்தக் கடிதந்தான்செய்திருக்க வேண்டுமென்பதைஅதன்கசங்கிய கோலமே எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தது.

நடராஜன் ஒன்றும் புரியாமல் கேள்விக் குறிகளெல்லாம் மண்டையைப் புட்டுக் கொண்டுவர பரபர வென்று அதை விரித்துப் பார்த்தான். அவ்வளவுதான், அவன் விழிகள் சொருகிக்கொண்டு போயிற்று. அந்தோ! அது ஒரு காதல் கடிதம். எழுதியது வேறுயாருமல்ல இந்த அப்பாவி நடராஜன் தான். அதிலிருந்த எழுத்துகளெல்லாம் "என்ன முழிக்கிருய்? நீதானே இதெல்லாம் எழுதியது?" என்று கேட்பதுபோல் இருந்தன.

"இதை நானு எழுதினேன். எப்போது எழுதினேன். யாருக்கு எழுதினேன்!ஐயகோ ஒன்றும் புரியவில்லேயே" என்று அலறிக் கொண்டு அப்படியே கட்டிலில் விழுந்து விட்டான். "மயக்கமா கலக்கமா மனதிலே குழப்பமா!" என்று அடுத்தவீட்டு ரேடியோ அலறிக் கொண்டிருந்தது. அவன் காதில் விழ நியாயமில்லே.

விழுந்தவன் உண்மையில் மயங்கியேவிட்டான். மயக்கம் தீர்ந்துஎழ ஒரு மணிக்குமேல் ஆகிவிட்டது. பக்கத்தில் படபடத்துக் கொண்டு இருந்த கடிதமும், அதே கோலத்தோடு ஆற்றுவாரின்றி மனம் வெம்பிக் கொண்டிருந்த அவனுடைய அத்தியும் (அத்தி என்பது அத்தான் என்ற சொல்லின் பெண்பால்) நடந்ததெல்லாம் கனவல்ல நனவுதான் என்பதை அடித்துக் கூறிக் கொண்டிருந்தன.

கடிதத்தை வைத்துக்கொண்டு மண்டையைக் குழப்பிக்கொண்டான் நடராஜன். நோபல் பரிசு பெறத் தகுதியுடைய தன் அபார ஞாபக சக்தியிலிருந்து எதையோ பலவந்தமாகப் பிடுங்கிக் கொள்ள முயன்று கொண்டிருந்தான். அவன் சிந்தனே எங்கோ வெல்லாம் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது. சிந்தனேக்குச் சாக்கிரட்டீஸ் முதல் செல்லேயாவரை (இவர் எட்டுப் பெண்களேப் பெற்று ஓட்டாண்டியானவர் என்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது) அத்தனேபேரும் பிச்சை வாங்கும்படியாக அவன் நிலே இருந்தது. கடிதத்தை ஒருமுறையல்ல ஓராயிரம் முறை படித்தான்.

"அன்பே! இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் வழக்கமாக நாம் சந்திக்கும் இடத்தில் என்னே வந்து காண்பாயா? உன்னேக் காணுமல் என்னுல் இருக்க, நிற்க, படுக்க ஒன்றுமே செய்ய முடியவில்லே. இன்னும் இரண்டு நாள் வரைக்

கும்தானே இதெல்லாம். அப்புறம் ...அப்புறம்...ஆகா! சொல்லவே வாய் இனிக்கிறது. அன்பே! ஓடி வருவாயா?

என்றும் உனது
நடராஜன்.

தலையை ஒரு குலுக்கு குலுக்கி விட்டு ஓராயிரத்து ஓராவது தடவையாக அதைப் படித்தான், அவ்வளவுதான் 'வெற்றி! வெற்றி!' என்று கூரையே பிய்ந்து விடும் படியாக அவனிடமிருந்து ஓர் அலறல் கிளம்பியது. அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தன்னைப் போட்டியின்றித் தேர்ந்தெடுத்தால் எப்படி அலறுவானோ அப்படி அலறினான். அவன் வாழ்வில் சிந்தனையின் மூலம் கிடைத்த முதல் வெற்றியல்லவா அது.

விழுந்தடித்துக் கொண்டு அவள் முன்னே ஓடினான். 'நளினி இதோ உனது கலக்கமும் கண்ணீரும் தீரப்போகிறது! பாரடி பைங்கிளியே உன் சந்தேகமெல்லாம் காற்றோடு காற்றாய்ப் பறக்கப் போகிறது. இந்தக் கடிதத்தையார் எழுதியது தெரியுமா? நானேதான். நாசமாகப்போக, இது முந்தியே தெரிந்த விஷயமாச்சே! யாருக்கென்று கேட்கிறாயா? இதோ சொல்லிவிடுகிறேன், நன்றாகக் கேள். மயங்காதேமானே!என் காதலி தெரியுமா காதலி! அவளுக்குத்தான்"

"என்ன காதலியா!" திடீரென எதிர்ப்பக்கத்திலிருந்து ஒரு புலி சீறியது. "அவதிப்படுகிறாயே அஞ்சுகமே! அவள் யார் தெரியுமா? என் முன் இதோ நிற்கிறாளே நளினி என்ற நங்கை இவளுக்குத்தான். ஹா! ஹா! ஹா!

## சிக்... கல்!

ஹோட்டலில் சாப்பிட்டார் அவர். சோற்றிலும் பார்க்கக் கற்களே அதிகமாக இருந்தன. ஆத்திரத்துடன் முதலாளியிடம் சென்றார்.

"சாப்பாட்டில் வெறும் கற்கள்தான் கிடக்கிறது!"

அதேயளவு ஆத்திரத்துடன் முதலாளியும் பாய்ந்தார்:

"ஆமாம், நீர் கொடுத்த ஒரு ரூபாவிற்கு, வைரக்கல்லையும் வைடூரியத்தையுமா போட்டு வைக்கச் சொல்றீங்க?"

"என்ன ஹா! ஹா! ஹா! நாங்கள கடிதம் எழுதியா காதலித்தோம்? எந்தக் காலத்தில் எழுதினோம்? என்ன கயிறு திரிக்கிறீர்கள்? உங்களையே என் தெய்வமாக எண்ணி என் உயிரையே அர்ப்பணித்தேன்! என்னை மறந்துவிட்டு இன்னொருத்திக்குக் காதல் கடிதம் எழுதுகிறீர்களே! இதெல்லாம் நியாயமா? உண்மையைக் கூறிவிடுங்கள்' என்று சிலிர்த்தெழுந்தாள் நளினி. மழை நின்றும் முழக்கம் நில்லாததுபோல்ஆகிவிட்டது. பின்னே என்னவாம். எவ்வளவு உள்ளன்போடு அவனைக் காதலித்தாள் எதிர்காலத்தைப் பற்றி எத்தனை இன்பக் கோட்டையெல்லாம் கட்டினாள். அப்படியிருக்க அவன் இன்னொருத்திக்குக் காதல் கடிதம் வரைந்தால் எப்படித்தான் அந்தப் பெண்ணுடையஇதயம் பொறுக்கும்?

நடராஜன் துடித்தான் தன்

சிந்தனைச் செல்வங்ளெலலாம் சிதறி விடாதபடி அயன் அயனுன பாயிண்டுகளையெல்லாம் கியூவில் நிற்கவிட்டு ஒருமுறை சரிபார்த்தான். அப்புறம் ஒவ்வொன்ருக எடுத்து வீசத் தொடங்கினுனே பார்க்கலாம். "நளினி நீ கேட்டதும் சரிதான், உண்மையைத்தான் கூறப்போகிறேன். கொஞ்சம் செவி மடுப்பாய்."

"நம் திருமணம் நடப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னமே உன்னை வெளியே போகவேண்டா மென்று உனது வீட்டார் தடை செய்துவிட்டார்களல்லவா?

"ஆமாம்!" என்று ஆமோதித்தாள் நளினி.

"அது தெரியும், அந்த நான்கு நாள்வரை உன்னைக் காணுமல் நான் பட்ட நரக வேதனை உனக்குத் தெரியுமா? என்ன பேசாமலிருக்கிருய்? மறந்துவிட்டாயா? கடந்த கால வரலாற்று ஏடுகளை எடுத்துப் புரட்டிப்பார் உண்மை விளங்கும்" என்று கூறிவிட்டு இடுப்பில் கையை ஊன்றிய வண்ணம் மிடுக்காக அவளைப் பார்த்தான் நடராஜன்.

"ம்! மேலே சொல்லுங்கள்!" என்ருள் நளினி.

நடராஜன் தொடர்ந்தான்; "அந்த நரகவேதனையிலிருந்து விடுபட வேண்டுமானுல் உன்னைக் காணவேண்டுமே, அதற்கு என்ன செய்வது? எமது மூதாதையர்கள் காட்டிய வழியின்படி உனக்கு கடிதம் எழுதலாமா என்று சிந்தித்தேன். உடனே எழுதியும் விட்டேன். ஆனுல் அதை எப்படி உனக்குத் தருவது? ஒருவழியும் புலப்படவில்லை.உன்னுடைய தோழி ஒருத்தியிடம் கொடுக்கலாமா என்று யோசித்தேன். அப்புறம் அவள் அதைத் தனக்குத்தான் கொடுத்தேன் என்று நினைத்துக் கொண்டு பதில் கடிதம் எழுதிவிட்டால் வேறு வினையே வேண்டாம்! நானே உன்னிடம் வரலாமா என்று யோசித்தேன். உன்மீதுதான் பாதுகாப்புச் சட்டம் அமுலாக்கப் படுவிட்டதே, எப்படி வரமுடியும்? அப்படித்தான் கிழக்குஜேர்மனிக்குள் புகுந்தமாதிரி வந்தாலும் உன்னைத் தேடிக் கொண்டு வருபவர்கள் என் மடியில் உன்னைக் கண்டுவிட்டு என்ன நினைப்பார்கள், அதெல்லாம் பண்பாகுமா? இதையெல்லாம் முந்தியே யோசித்து உனக்குப் பிறகு ஒரு தம்பியையோ தங்கையோ பெற்று வைக்காத உனது அம்மா அப்பாவைத் திட்டிவிட்டு அப்படியே கடிதத்தை மடித்து பெட்டிக்குள் வைத்து விட்டேன். எனது தவிப்பை எந்த ஆண்டவன் அறிந்து உனக்குத் தெரிவித்தானே தெரியவில்லை, நீயே எல்லார் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு என்னிடம் வந்துவிட்டாய். உன்னைக் கண்டதும் என் தவிப்பும் தகர்ந்தது. வேதனையும் விடுபட்டது. என்ன என் வாதத் திறமையைக்கண்டு திகைக்கிருயா? திகை! திகை! நன்ருகத் திகை! உனக்கு எப்படித் தெரியும் இந்த உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு எத்தனை லோக சஞ்சாரங்களெல்லாம் நடத்தினேனென்று" எனக் கூறிவிட்டு சந்தேகம் தீர்ந்ததுதானே என்ற பாவனையில் அவளைப் பார்த்தான்

திடீரென்று எதிர்பாரதாவிதமாக இன்னெரு கேள்விகணையை விடுத்தாள் அவள். "அன்பே! என்று

எழுதினீர்களே அது நானேதான் என்பதை எப்படி நம்புவது?"

"நன்றாகக் கேட்டாய்போ! இந்தக் கடிதத்தில் உள்ள விஷயத்தை யும் எழுதப்பட்ட காலத்தையும் ஒப்பிட்டுப்பார். நம திருமணம் மே மாதம் இருபத்தி மூன்றும் திகதி நடந்ததல்லவா? அதற்கு இரண்டு நாட்களுக்கு முந்தித்தானே இந்த இழவு கடிதத்தை எழுதினேன். பார் நான் கூறுவது பொய்யென்றால் இருபத்தோராம் திகதி மே மாதம் என்று குறித்திருக்கிறேனே! இப்படியெல்லாம் வருமென்று தெரிந்திருந்தால் கந்தையா சுப்பிரமணியம் வேலழகர் நளினிதேவி என்று உன் முழுப்பெயரையும் எழுதியிருப்பேனே! இப்போதாவது தெரிந்து கொள் நான் உன்மீது கொண்ட அப்பழுக்கற்ற காதலின் பெருமையை!"

அப்போதுதான் நளியின் முகத்தில் பழைய பொலிவைக் காண முடிந்தது. கண்களும் இதழ்களும் மலர்ந்தன. அத்தான் என்று கூறிக் கொண்டே அவனுடைய மார்பில் சாய்ந்து விட்டாள் அவள்,

எப்போது இந்தச் சந்தர்ப்பம் வருமென்று காத்து நின்ற நடராஜன் தன்னைப்பற்றி இன்னும் அவள் பெரிதாக நினைக்கட்டுமே என்று "நளினி! பார்த்தாயா, இந்தக் கடிதம் நம்மை எத்தனை கலக்கெல்லாம் கலக்கிவிட்டதென்று" என்று ஒரு போடுபோட்டான்.

உடனே அவளுடைய மனம் இன்னும் தன் பிழை உணர்ந்து வெட்கிவெட்டது. "உங்களை வேதனைக்குள்ளாக்கிவிட்டேன், மன்னிப்பீர்களா அத்தான்?" என்றாள்.

"மன்னிப்பா உனக்கா! அது தான் நடக்காது. உனக்குத் தண்டனை தரத்தான் போகிறேன் வா இப்படி" என்று கூறி அவளை இழுத்துக்கொண்டு கட்டிலில்போய் அமர்ந்தான். "நளினி இதோபார் உனக்குச் சரியான தண்டனை தரப் போகிறேன் என்று கூறிவிட்டு அவள் காதருகே குனிந்து "உன்கை களிலேயுள்ள கண்ணாடி வளையல் களையெல்லாம் கழற்றி வைக்கிறாயா?" என்றான்.


## பொங்கல் மலரில்!

# ஏன் மறைத்தேன் என் பெயரை?

உதயணன், அன்புமணி, யாழ்நங்கை
செங்கை ஆழியான், செம்பியன் செல்வன்

ஆகியோர் பங்கு பற்றும் புதுமையான
அம்சம் இடம்பெறுகின்றது.

# தேசீயம்

## மு பொன்னம்பலம்

ஈழத் தமிழர்களின் எண்ணம் விரிகிறது—அவர்
வாழ்வின் எதிர்கால வண்ணம் தெரிகிறது!
தன்னைப் படிக்கின்ற காலம் எழுகிறது!
அன்னை பசித்திருக்க ஆருக்கோ குடைகாவக்
கோணல் வழிகாட்டும் கொம்பு படைத்தவரின்
''கேண்மைச் சுபாவங்''கள் கிழிக்கப்படுகிறது!
உண்மை அறிதீரர் உதயம் தெரிகிறது!

∴ ∴ ∴

தம்பி நீ தமிழனா? சந்தோசம், சந்தோசம்!
இனம் இனத்தையே எப்பவும் நாடுது!
அதைவிட்டு,
அறிவின் நெறிகெட்டு,
வரலாற்றின் வாசனையே வரமுன்னர் மண்ணைந்த
மனிதப் பெருங்குலத்தின் இயல்பை அறியாது,
வறுமைச் சுபாவம் வளர்த்த பசிக்கொதிப்பில்,
உளவியலைத் தள்ளிவிட்டு, உணவே உலகென்ற
போக்கால், அந்தப் ''புரட்சி'' வெறி
நோக்கால்—
உலகத்தே ஓரினந்தான், தொழிலாளப் பேரினமே!
பொதுமைப் புரட்சியிலே புவியாள்வோர் நடுங்கிடுக!
தேசம் நமக்கில்லை, தேசீயமும் இல்லையப்பா!
நாடென்று கோடிட்ட எல்லைக் குறிப்பில்லை.
சொத்தில்லை, பற்றில்லை, எமக்கோ இருப்பதெல்லாம்
பசியோ பசியப்பா, பாழ்பட்டுப் போனபசி!
அதனால்—
சாப்பாடே வாழ்க்கை, சரித்திரமும் சாப்பாடே!
இலக்கியமும் சாப்பாடே, இல்லறமும் சாப்பாடே!
தத்துவமும் சாப்பாடே வித்துவமும் சாப்பாடே!
என்ற ஒரு கொள்கை வந்தே கவிகிறது!

∴ ∴ ∴

இந்த அருங்கொள்கை எம்தாயின் சோதரரை
வந்தே அணைத்துத்தன் வாலைப் பருவத்தின்
கோல அசைவுகளால் குலுக்கிச் சிறையிட்டு......
பாவம், அதுகளும் பசித்துக் கிடந்ததுகள்
சாதிச் சிறுமைகளுள் தள்ளுண்டு அழுந்தியதால்

',நீயே அபய"மென நெடிதாய் விழுந்துவிட்டார்!
தாயின் மொழி மறந்தார் சேயின் மதிபடைத்தார்!
தனது பிரதேசம், தன்னினத்தின் முன்னவர்கள்
புதைந்து எலும்பான புகழ் பூத்த மண்வளத்தை
மெல்லப் பிறர்கவர விட்டே இவர்பெரிய
இரத்தப் புரட்சிக்காய் "சத்துக்"கள் சேர்க்கின்றார்!
பக்கத் துணையாக பசியொன்றே கருவாக
வைத்துக் கதையெழுதும் "பட்டினி" எழுத்தாளர்!
சொந்த இழுக்கைத் துடைப்பதற்காய்க் கட்சியெனும்
பந்தல் தனுக்குள் பதுங்கித் திரிகின்ற
காட்டிக் கொடுப்பவர்கள்! காக்காய் பிடிப்பவர்கள்!

∴ ∴ ∴

காலம் சிறிது கரைந்து மறைகிறது,
அப்போது—
"ஐயா ஈழத் தருமைத் தமிழ்மகனே,
எங்கேயுன் தேசம் எங்கேயுன் நாட்டுமொழி?"
என்றே ஒரு கேள்வி எங்கோ எழுகிறது.
உடனே—
:"ஈதோ இருக்கிறது" என்றார் எழுத்தாளர்
தான் செய்த சிறுகதையில் தானிழந்த பொன்னாட்டின்
கொச்சை மொழிவழக்கை, கும்பிமணல் வளத்தைக்
காட்டி மகிழ்கின்றார், காணாதோ, "தேசீய"மே!
ஆனால்—
இன்னும் நமக்கு இருக்கிறது காலமடா!
அந்தக் கடவுளருள் அற்றின்னும் போகவில்லை!

∴ ∴ ∴

"ஓடு தமிழா உன்னாட்டுக்" கென்ற வெறிக்
கூச்சல் தனைக்கேட்டும் கொலைகள் பலவிழுந்தும்
"தேசம் நமக்கெதற்கு? தேசீயமேன்? இங்கெமக்கு
தேவை பெரும்புரட்சி, தேசத்தின் ஐக்கியமே!"
என்று தமக்கே இன்னவென்று தெரியாது
பேசிப் பிறரின் தேசீயத்துள் அமிழ்ந்துகொண்டே,
பரந்த பொதுவுடைமை பேசும்அவருக்கெம்
இரங்கற் பெரும் பாக்கள்......!

∴ ∴ ∴

காலம் அறிவின் கதிரைப் பொழிகிறது.
மூலைமுடுக்கெங்கும் வெளிச்சம்போய் மூள்கிறது
அந்தப் பெருநாடே! ஆமாம், புரட்சிக்குத்
தந்தை எனும்நாடே, தாவி ஒருமுறைதான்
வந்த பெரும்நாஸித் தீரப்படையினத்தைத்

சிந்த, முரண் என்ற தேசீயத்தை ஒடித்தான்

கூவி அழைத்ததடா! குற்றுயிராய் பின்னர்தான்
ஆவி பிழைத்ததடா! ஆமாம், இவையினிமேல்
மெல்லத் தெரியவரும்! மனித இயல்புக்கு
ஒவ்வாப் புரட்சிகளால் உண்டாவதொன்றில்லை!
தன்னை அழித்தபின்னர் தானென்ன புரட்சியினை
முன்னின்று நடத்துவதோ? மூளை குழம்புதய்யா!

ஃ ஃ ஃ

ஆனால் நாம் தப்பிவிட்டோம்!
சிந்தைப் பெருவெளியில் தெளிவு பிறக்கிறது!
சிங்கம் விலங்கறுக்கத் தினவு பெறுகிறது!
எங்கணுமே புள்ளோசை. இவ்வண்டின் ரீங்காரம்!
"அம்மா" வென் றெங்கோ அலறும் பசுக்கன்று!
எல்லாம் விடிவை இயம்பும் மொழிக்குலங்கள்!
அடிவானின் அதரத்தே விடிவெள்ளிப் புன்சிரிப்பு!
அம்மா!
ஈழத் தமிழகமே, இனிமேல்தான் நீ அழகாய்
வாழப் போகின்றாய், வளமான பெருவாழ்வு!

நினைவுமலர்கள் வெளியிடுவோரே!
பாடசாலை அதிபர்களே!
புத்தக ஆசிரியர்களே!
பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்
சிறந்த 'புளக்'குகள்
செய்யவேண்டுமானால்
எங்களுக்கு எழுதுங்கள்.

**Sri Lanka Block Makers**

131, MESSENGER STREET, COLOMBO.

# அப்துல்லாவின் பெருநாள்

## எம். எம். மக்கீன்

இன்னும் இரண்டே நாட்கள் தான்...'பெருநாள், பெருநாள்' என்று எல்லாரும் வாய் நிறையைச் சொல்லி மகிழ்ந்து கொள்ளும் அந்த நோன்புப் பெருநாள் வந்து விடும்...வந்த சுவடு தெரியாமல் போயும் விடும். ஆனால் போவதைப் பற்றி முன்கூட்டியே கவலைப்பட எந்த 'மனிதப்பூச்சி' தயாராக இருக்கிறது! வருவதில் ஓர் ஆனந்தம், ஒரு தனி இன்பம்...ஆசாபாசங்களை மறந்து சற்றே மகிழ்ச்சி. இப்படி இவைகளில் லயிக்கும் மனிதர்கள் தான் அனேகம். இயற்கை தான்!

ஆனால் இந்த அப்துல்லாவைப் போல ஒரு மனிதன் இருப்பானா?

பெருநாள் வருகிறது என்றதும் இப்பவே துடிதுடித்து உயிரைவிட்டு விடப்பார்க்கும் அவன் பெருநாள் போவதைப்பற்றி மட்டும் இவ்வளவு ஆனந்தப்படுவானேன்.

கொழும்பில் 'மருதானை' ஒரு முக்கியமான இடம். முஸ்லிம்கள் நிறைந்த பகுதி அங்கே மொகிதீன் மஸ்ஜித் தெரு மக்கள் வழக்கில் ஒரு 'முடுக்காக' இருந்தாலும் முஸ்லிம்கள் வியாபித்துள்ள சந்து பொந்து நிறைந்த ஓர் இடம்.

இப்படிப்பட்ட இடத்திலிருந்து தான், குவா குவா என்று அப்துல்லா கத்தி உலகத்தைக் கண் விழித்துப் பார்த்ததும், வாழ்க்கையைத் துவங்கியதும், இப்பொழுது வாழ் விழந்து கிடப்பதும்!

''லொக்...லொக்...''

–இப்படி உயிரை விடுவதுபோல இருமுவது அப்துல்லாதான்.

–அந்த ரகசியம் தெரு பூராவுக்கும் தெரியும்!

'அப்துல்லா வாயிலிருந்து இன்றைக்கு ஒருகுடம் ரத்தம் வந்ததாம், என்று வீட்டுக்கு வீடு கூடிப்பேசும் பெண்கள் திலகங்கள் மத்தியில் ஒரு ரகஸ்யம் இருக்க முடியுமா?

''லொக்...லொக்...''

''வாப்பா!''

''என்ன கண்ணே...?" - வயது சென்ற கிழம்போல 'நடு நடுங்கும்' கட்டிலில் சுவர் பக்கம் திரும்பியிருந்த அப்துல்லா திரும்பினான்.

வந்திருப்பது யார்?

அதற்கு விடை அவனுக்கு நன்றாகத் தெரியும். 'பிள்ளைகள் என்ற ஒரு நீண்ட பட்டியலில்'கடைசியானது'தான்–இக்பால்–வந்திருப்பது என்று.

ஒரு புன்னகை. ஜீவனேயில்லாத புன்னகை: என்ன இருந்தாலும் பாசம் விடுமா?

''வாப்பா... நாளைக்கழித்துப் பெருநாளாமே... தாத்தா சொல்கிரு...!''

''உம்...''

,'புரியாணி, வட்டிலப்பம் எல்லாம் தின்னலாமாம்...அந்தப் பங்களாவிலிருக்கிற பக்கீர் சொல்ரான் வாப்பா..."

''உம்..."

''காலம்பர உடுக்க ஒருமாதிரி கல்சனும், அந்திக்கு உடுக்க ஒரு மாதிரி கல்சனும் சட்டையும் பக்கீர் தச்சிருக்கிரான் வாப்பா...!''

"உம்..."

"அடுத்த வூட்டிலேயிருக்கிற அகமது சொல்ரான் வாப்பா, அவுங்க வூட்டிலே ரெண்டு ஆடு வாங்கியிருக்கிராங்களாம் வாப்பா...!"

"உம்..."

"எங்கட உம்மா தாத்தா, நாநா எல்லோரும் ஒரு நோன்பும் விடாமப் புடிக்கிராங்களே வாப்பா... அவுங்களுக்கு ஏன் நீங்க ஒண்டும் வாங்கிக் கொடுக்கல்லே...?"

"உம்..."

"போங்கோ வாப்பா. எல்லாத்துக்கும் உம் தானு? பக்கீர் வூட்டிலேயும் அகமது வூட்டிலேயும் ஒருத்தர் சரி நோன்பு இல்லியே... அவுங்களுக்கு மட்டும் எல்லாம் எப்புடி கிடைக்கும்?"

"உம்..."

"போங்கோ வாப்பா. இனி உம் என்று சொன்னு நான் அழுவேன்... ஊம் ஊம்..."

சின்னஞ்சிறு குழந்தைகளின் உலக அறிவே இப்படித்தான் வளருகிறது என்ன விசித்திரம்!

"லொக்...லொக்..."– அப்துல்லா 'வழக்கம் போல' இருமினுர். கண்களில் லேசாகக் கண்ணீர் கசிந்தது. தன் ஆறு வயதுக் குழ்ந்தை இக்பாலின் கேள்விகளுக்கும் 'விசேட செய்தியறிக்கைகளுக்கும்' மறுமொழி கூறத் தெரியாத அவனும் ஒரு மனிதனு என்று அவன் நினைத்துப் பார்த்தான். குழந்தை இக்பாலை அணைத்துக்கொண்டு அவனுக்கு அழத்தான் தெரிந்தது.

"இல்லையடா என் செல்வமே... உனக்கு எல்லாம் வரும்... இன்னும் இரண்டு நாள் இருக்கிறதே குழந்தைக்குச் சமாதானம் சொல்வதாகத் தெரியவில்லை...ஒரு பிஞ்சு உள்ளத்தை ஏமாற்றுவதாக இருந்தது!

"வாப்பா...எனக்கு மட்டும் வாணும்...நாநா தாத்தா, எல்லாருக்கும் வாங்கிக் கொடுக்கணும்... அப்பதான்..."

"உம்..."

"உம் என்று சொல்ல வாணும்... சரி எண்டு சொல்லுங்கோ..."

"சரி!"

"வாப்பா...எனக்கு ... எனக்கு... பச்சைக்கலரிலே சட்டை வாங்கணும் ...எனக்கு அது தான் ஆசை..."

"உம் ...ச...ரி...!" – லொக் லொக்...!

"வாப்பா...என்ன இது...அழுவு நீங்களே...யாரை நெனைச்சாம்...?"

'உன்னை நினைத்துத்தான்' என்று சொல்ல அப்துல்லாவுக்குத் திராணி ஏது?

"போய் வெளியிலே வெளையாடுங்கோ...பக்கீருக்கும் அகமதுக்கும் கெடைக்கிறமாதிரி உங்களுக்கும் எல்லாம் கிடைக்கும்!"

"அய்... அய்... எங்க வாப்பா நல்லவாப்பா...!"–அந்தக் குழந்தைக்குத்தான் எத்தனை ஆனந்தம்! குழந்தை அந்த சந்தோஷ செய்தியை எல்லோருக்கும் சொல்ல வெளியே பறந்தது.

அப்துல்லா...?

விட்டுவிட்டு வரும் அதே இருமல்...கண்ணீர் மல்கும் கண்கள்... அடித்துப் போட்டாப் போன்று கட்டிலிலேயே சுருண்டு கிடக்கும் நிலைமை இவற்றினூடே புழுவாய்த் துடித்தான்...பழைய புதிய சிந்தனைகள் இதயத்துள்...

இரண்டொரு வருடத்திற்கு முன்பு அப்துல்லா ஒரு முழுமனிதன் தான். எங்கோ ஒரு கடையில் கணக்கு வழக்கு எல்லாவற்றையும் 'தலையில் போட்டு' செய்கிற ஒரு பொறுப்பான வேலை. முதலாளியின் அன்பிலும் ஆதரவிலும், முன்னுக்கு வரலாமென்ற நம்பிக்கை...அப்படியே வந்து கொண்டுமிருந்தான். முதலாளிக்கும் இவனுக்கும் பொருத்தம் பார்த்து 'ஒன்று' வந்தது! அவருக்குப் புற்று நோய்...இவனுக்கு சயரோகம். அவர் இந்தியாவில் வேலூருக்குப் போனார்... இவன் வெளிசர அரசாங்க விடுதிக்குப் போனான். முன்னவர் ஆயுள் சடுதியில் தீர்ந்தது...பின்னவன் ஆயுள் வருடக் கணக்கில் இழுத்துக் கொண்டிருக்கிறது.

கடையின் நிர்வாகம் தடம் புரண்டு கொடுத்தது. அப்துல்லாவின் 'பதவி' போன இடம் தெரியவில்லை.

''நல்ல சுகம், போய்வா" என்று இரண்டுமுறை அப்துல்லாவுக்கு வாழ்வைக் கொடுத்து அனுப்பினார்கள் டாக்டர்கள். ஆனால் நினைத்து நினைத்து விட்டு விட்டுப் பிடித்தது அந்தச் 'சனியன்'! அப்துல்லா எப்படித்தான் மீள்வது?

கடைசியில் அவனுக்கு மிஞ்சிய செல்வங்கள் ஆறு குழந்தைகள்... ஒரு கட்டில். ஒரு எச்சி துப்பும் படிக்கம். இவ்வளவுதான்! நல்ல வேளை! அருமைக்கு ஒரே ஒரு பெண்! அது வரையில் அப்துல்லா 'யோகக்காரன்'!

மாதாமாதம் அரசினரால் அப்துல்லாவுக்கு அறுபது ரூபாய் பஞ்சப்படி கிடைத்தது. பிள்ளைகுட்டிக்காரன் என்பதற்காக அவனுக்கு அவ்வளவு 'பெரிய'தொகை!என்றாலும்வாழ்க்கை வண்டி சேறும் சகதியும்நிறைந்த பாதையில் தான் மெள்ள மெள்ள உருண்டது.

இதோ இப்பொழுது பெரு நாள்..! வாழ்க்கைப் பாதையில் ஒரு சோதனை நிறைந்தஇடம் அது...!

'லொக் லொக்' என்று இருமினாலும் கட்டிலில் படுத்தாலும் அவனைப் பொறுத்த வரையில் அவன் நோயற்ற மனிதன் தான். அதனை ஒப்புக்கொள்ள அவன் தயாராக இருந்தான். வெளியிலே ஓடி ஆடி 'இரண்டொன்றை' சம்பாதிக்க அவனும் ஆசைப்படத்தான் செய்தான். 'தாலி கட்டியவள்' என்று ஒருத்தி இருக்கிறாளே, அவள் விட்டுத் தொலைக்கவேண்டாமா?

''அல்லா ரசூலுக்காக நீங்கள் வெளியே போகக்கூடாது... நான் ஒருத்தி இருக்கிற வரைக்கும் அப்பிடி விடமாட்டேன்... நீங்கள் வேலை, செய்கிறீர்கள் என்று கவர்மேந்துக்குத் தெரிந்தால் கிடைக்கிற அறுபது ரூபாயும் கிடைக்காது...நீங்கள்சும்மா இருந்து சொகம் தேடவேண்டுமென்று தான் அவர்கள் சல்லி தருகிறார்கள்...!"-இப்படி அவள் சொல்வதை ஏற்றுக் கொள்வதா கூடாதா?

''கூடாது...!?

-சிந்தனை கலைந்தது... மெள்ள வாய் இதை முணு முணுத்தது...

''எதை வாப்பா கூடாது என்கிறீர்கள்...? எங்களுக்கு உடுபுடவை வாங்கித் தருவதையா ? அவனுடைய அருமைப் பெண் வந்து கேட்டாள் தன்னுடைய மழலை மொழியிலே!

''இல்லைமகளே, இல்லை...தேவையான உடுபுடவை, தட்டுமுட்டு

சாமான் எல்லாம் வரும்...பேசாமல் போய் விளையாடுங்கோ...”

குழந்தைக்கு அவ்வளவு போதா தா? அந்த நல்ல நேரத்தை எதிர் பார்த்து அது பறந்தது.

அப்துல்லாவின் கண்களில் திடீ ரென்று ஒளி வெள்ளம்.

கொழும்பு துறைமுகக் குதத்தில் வேலைநிறுத்தம் தொடர்ந்து கொண் டிருந்ததை உத்தேசித்து வெளியி லிருந்து தற்காலிகமாக ஆட்களை எடுப்பது என்று நிர்வாகிகள் ஒன்று சேர்ந்து காலைப் பத்திரிகையில் விட் டிருந்த அறிக்கை அப்துல்லாவின் கண்களில் குண்டு குண்டாகத் தெரிந் தது.

தீர்க்கமான அந்த முடிவுக்குவர அப்துல்லா சற்று நேரங் கூடதாம திக்கவில்லை. அவனுடைய இதய ஆழத்துள் புதைந்து கிடந்த ஒரு பயங்கர எண்ணந்தான் அந்த முடி வுக்கு வர அவனுக்கு அவ்வளவு ஊக்கத்தைக் கொடுத்துவிட்டது.

இரண்டே நாட்கள் தான்...

பொழுது விடிந்து எப்படி பொழுது போயிற்று என்று தெரிய வில்லை.

மாலை நேரம்...

நாளை விடிந்தால் நோன்புப் பெருநாள்...

அப்துல்லாவின் குழந்தைகள் ‘வேலைக்குப்போன” வாப்பாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் அப்துல்லாவின் துணைவிக்கு அவ னது போக்கு பெரிய விசித்திரமாக இருந்தாலும் அவன் கொண்டுபோ கிற ‘பத்து ரூபா” காசை அவளும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு தானிருந்தாள்.

அப்துல்லா வந்தான்!

வெறுங்கையோடல்ல. சுமக்க முடியாத சாமான்களை சுமந்த வண் ணம் இரைக்க இரைக்க உள்ளே நுழைந்தான் அவன்.

அடடா...! விதவிதமான ‘ரெடி மேட்’ சட்டைகள் என்ன, சாரங்கள் என்ன, பாவாடைகள் என்ன, மணிப் புரி சாரிகள் என்ன, நெய் சோற் றுக்கு வேண்டிய காய்கறிகள் என்ன! ஆஹா...! கூட நான்கு கோழிகளு மல்லவா சத்தத்தை எழுப்பி நாங் களுமிருக்கின்றோம் என்று காட்டிக் கொண்டன!

குழந்தைகள் விழி பிதுங்க வாப் பாவையே அதிசயத்தோடு பார்த்தன. துணைவி காரணமில்லாத் திகிலோடு தன் துணைவனைப் பார்த்தாள்...

‘‘எங்க வாப்பா நல்ல வாப்பா... தங்க வாப்பா...!”— குழந்தைகள் கும்மாளம் காதைப்பிளந்தது.

‘‘லொக்... லொக்...’’

—அவன் இருமினான்.

‘‘பாயைப்போடு... நல்லாப் படுத் துத் தூங்கவேண்டும்...!”— என்று துணைவிக்குக் கட்டளையைப் போட் டான். பின்னர் ஆடி அசைந்து நடைப்பிணம் போல அவன் கட்டிலை நோக்கி நடந்தான்.

பார்க்கப் பரிதாபமாக இருந் தது...

✿

விடிந்து விட்டது...

மொஹிதீன் மஸ்ஜித் தெருவில் பெருநாள் கோலாகலம் கனஜோராக இருந்தது...

பெருநாள் கக்பீர் பள்ளி வாச லிலிருந்தும் வானொலிப் பெட்டிகளி லிருந்தும் ரம்மியமாக காதில் விழுந்

தது. குழந்தைகள் கூட்டம் புத்தாடைகள் உடுத்தி தெரு முழுதும் வியாபித்திருந்தது.

“அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்...”

அப்துல்லாவின் அருமைத் துணைவிவெளியில் வந்து ‘ஓ’வென்று அலறினாள்.

ஜனசமுத்திரம் திரண்டது.

“என்ன ?, என்ன ? என்றூர்கள் எல்லாரும்

எதையும் சட்டை செய்யாமல் இந்த உலகத்தை விட்டு அப்துல்லா ‘ஓடிவிட்டது’ அவர்களுக்குத் தெரியாது போய் விடுமா?

“என்ன பரிதாபம்...சில விநாடிகளுக்கு முன்புதான் அப்துல்லாவின் உயிர் மூச்சு ஓய்ந்ததாம்...” என்ருர்கள் எல்லாரும் ஒருமிக்க.

சற்று நேரம் போயிருக்கும்......

அப்துல்லாவின் ‘பெருநாள் வீட்டு’ வாசலிலே ஒரு ஜீப் வந்து நின்றது. காக்கி சட்டை போட்ட மூன்று நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இறங்கினுர்கள்.

“துறைமுகக் குதத்தில் இரண்டு நாள் வேலைபார்த்த அப்துல்லா வீடு இதுதானே...? இரண்டு அரிசி மூடைகள் கடத்தி கள்ளத்தனமாக விற்ற குற்றத்திற்காக கைது செய்ய வந்திருக்கிறேம்”– என்றுர்கள் உத்தியோகத்தர்கள்.

உலகம் சிரிசிரியென்றுசிரித்தது; அப்துல்லா வீட்டுப் பெருநாள் இது தான் என்று சொல்லிச் சொல்லி!

O

மதிப்புரை

# லீலா பஞ்சாங்க சித்திரக்கலண்டர்

## *தயாரிப்பாளர்: லீலா ஸ்டோர், 249, நொறிஸ் வீதி கொழும்பு-11*

பெரும் புகழும் பெற்றுவரும் தமிழ் உலகக் கலண்டர்களுள் லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் முதன்மை வாய்ந்தது. காலத்திற்கு ஏற்ற மாதிரிப் பல அற்புத சம்பவங்களுடன் வெளிவந்து கொண்டிருக்கும் லீலா கலண்டரில், இம்முறையும் பல புதிய அம்சங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இது கலண்டர் உலகில் ஒரு தனிப்போக்கு. இரகுநாதையரால் கணிக்கப்பெற்ற திதி சுபவேளைகள்; இந்து முஸ்லீம் கிறிஸ்தவ, பண்டிகை விபரங்கள் ஆலய உற்சவங்கள் அரசியல் தலைவர்கள், பேறிஞர்கள், ஈழத் தமிழ்த்தியாகிகள், முதலியோரின் நினைவு தினங்கள், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள், யாவும் ஆதாரபூர்வமான 300க்குமேற்பட்ட சித்திரங்களுடன் வெளியிடப்பட்டிருப்பது, ஐயம் தெளிவுபட அறிந்து கொள்வதற்கு ஏதுவாகும். கல்விமான்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பத்திராதிபர்கள், அரசியல் வாதிகள், பொதுவாக எல்லா மக்களுக்குமே நன்கு உபயோகப் படக்கூடிய லீலாபஞ்சாங்க சித்திரக் கலண்டர் ஒவ்வோர் இல்லங்களிலும் நிச்சயம் தொங்கவேண்டும். கலண்டர் தயாரிப்பில் லீலா ஸ்தாபனத்தார், கையாண்டுவரும் முறைகள் பாராட்டத்தக்கவை.

இதேபோன்று அரியபலவிஷயங்களுடன் அழகிய பல வர்ண பிளாஸ்டிக் கவர்களில் வெளிவந்திருக்கும் பேர்ஸ்டயறிகளும், நாளொன்றிற்கு ½ பக்க வீதம் போதியளவு நாட்குறிப்புகள் எழுதக்கூடிய டெஸ்க் டயறிகளும் எல்லோரினதும் பாவனைக்குத் தகுந்த மாதிரி அமைந்திருக்கின்றன. நியாயமான விலைக்கு இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவித்துள்ளார்கள்.

—சம்பத்




"கருவிலே திருவாய்க் கனிந்த கவிஞர்களுள் அன்பர்கமால் தனியோர் சிறப்பையும் பரப்பையும் கொண்டவர். கவித்துவச் செறிவும், தனித்துவச்செருக்கும் வாய்ந்தன அவருடைய கவிதைகள்" எனப் பதிப்பகத்தார் இக்கவிதை நூலை அறிமுகப்படுத்துகிருர்கள். முற்போக்கு வட்டார விமர்சகர் க. கைலாசபதி அவர்கள் இக்கவிதைகள் இஸ்லாமியனல்லனை என்னைப் போன்ற வேருெரு சமயத்தவனும் பூரணமாக ஈடுபட்டுச்சுவைக்கும் வண்ணம் அமைந்துள்ளன என்றும், இஸ்லாம் வற்புறுத்தும்நம்பிக்கை சமத்துவம், சகோதரத்துவம், தியாகம் முதலிய இலட்சியங்களை...இஸ்லாமியப் புலவர்களின் உணர்வுவழிநின்றுஉணர்ச்சிச்செறிவுடன் இவ்வாசிரியர் பாடுகிருர் என்றும் கவிதைகளில் ஆசிரியரது மனிதாபிமானமும், சமுதாயப்பற்றும் எமக்குப் புலனுகின்றன என்றும் புகழ்ந்துள்ளார். ஆசிரியர், 'இது என் நடைவண்டி' என்று கூறினுலும் சற்று எச்சரிக்கையோடுதான் உள் நுழைய வேண்டியிருக்கிறது.

| | |
|---|---|
| நூல்: | புரட்சிக்கமால் கவிதைகள். |
| ஆசிரியர்: | புரட்சிக்கமால் |
| வெளியீடு: | இக்பால் பதிப்பகம் கண்டி |
| விலை: | ரூபா 3.00 |

ஆசிரியரின் கவிதை நூலில் உள்ள முதற் பதினெருபாடல்களும் சமயத்தின் உயர்வையும், முஸ்லீமின் பெருமையையும், தெய்வசிறப்பையும் கூறுவனவாகவே 'அமைந்துள்ளன. அவற்றுள் 'அருமை இறைவன் புகழங்கி அறிவாம் கைக்கு வசமாமோ' முதலிய அருமையான தொடர்கள் அங்கங்கே மிளிர்கின்றன. கண்ணே, எங்கள் கண்ணுவாய் என்ற தலைப்பு கவிதைக்கு ஏற்றதாக இல்லை. கருணை நிழல் என்று போட்டிருக்கலாம். பிரார்த்தனை நல்லபாடல். அல்லாஹ், அல்லாஹ் என்ற பாடலில் 'கருணை மிகப் பெரிதருளின் முதலே! முடிவே' என்ற இடத்தில் ஓசையும் யாப்பும் முறிந்து சிதறுகிறது. அப்படியே 'பொற்குவையே! அழகே. ஆவியிலே தவழ்கின்ருய்! தாயினியதிருவே! நாளும்' என்ற இடத்திலும்தடுமாறுகிறது. கொட்டு முரசே, சந்தத்தில், எண்ணத்தில் நல்லபாடல். ஈமான் சாதாரணம். இஸ்லாத்தில் இல்லை என்பது சினிமாப்பாடல் போல இருந்தாலும் எண்ணத்தில் உயர்ந்தது.

முதற் பதினெருபாடல்களுக்கப் பாலேதான் புரட்சிக்கமால் புனைபெயருக்கேற்பத் தென்படுகிருர். திருநாட்களின் போலித்தன்மையைத் தோலுரித்துக் காட்டுகிருர்

'கறையிருள் நெஞ்சர் தங்கள் கட்சியை, தலைமை வாழ்வைப் பறை கொட்டி வளர்க்க' என்று அவர் பாடும்போது பாரதிதாசனின் நினைவு வருகிறது. திருநாள்பரிசு என்ற கவிதை முதல்தரம். 'ஏழைக் கென்ன பரிசிடுவாய்' என்ற வரி ஏழை எனக்கென்ன பரிசென்றேன் என்றிருத்தல் நன்று. அகவற்பாக் களும் விருத்தப்பாக்களும் அடிக்கப் பட்டிருக்கும் முறையில் அவை எவ்வகைப் பாக்களென அறியமுடி யவில்லை. சமீபகாலமாக ஈழத்தில் பத்திரிகைகளிலும் வெண்பாகூடப் புதுமைப்போக்கில் அச்சடிக்கப்படு வதைக் காண்கின்றோம். இந்நூலி லும் இக்குறை காணக்கூடியதாக இருக்கிறது. 'ஆட்சி பொது' 'நீட்சி இலை முடிநிலைப்பதில்லை' என்ற வரி கள் போன்றவற்றையும் சில பா டல்களையும் வைத்துக் கொண்டு ஆசிரியரைச் சில 'இஸங்'களுக்குள் கொண்டுவரச் சிலர் நினைக்கலாம். ஆனால் ஆசிரியரின் சமயமூசசு'மற் றெல்லாவற்றையும் விட விஞ்சி நிற் து பாடல்கள் எல்லாவற்றிலும் தெரிகிறது.

புரட்சிக்கமாலின் சில கவிதை கள் அவரை வெகு உச்சத்தில் கொண்டு போய் நிறுத்துகின்றன. வேறுசில 'வரிக்கவிதைகள்' சாதா ரண கவிஞர் ஆக்குகின்றன, இவை தொடக்கக் கவிதைகளாகவும் இருக் கலாம். அவரின் வளர்ச்சிப்படியை அவதானிக்க இந்த நூலில் முடிய வில்லை, அவை மாறி மாறி வருகின் றன. அவரின் நல்ல கவிதைக்கு, நெஞ்சில் நிலைத்து நிற்கும் கவி தைக்கு உதாரணமாகப் பின்வரும் பாடலைக் காட்டலாம்.

"ஆட்டக்காரன் நம்மிறைவன்
ஆடும் காய்கள் நாமாவோம்
நாட்டம் போல நகர்த்துகிறான்
நானும் நீயும் நகர்கின்றோம்
தேட்டம் யாவும் அவன் சித்தம்
தெளிவும் மயக்கும் நம் வசமோ?
பாட்டும் பயனும் பாடகனும்
பரமன் கூத்தே, தெளிமன்னு!"

தெளிவு, எளிமை, ஆழம் என்றகவிதையின் இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக் கிறது இக்கவிதை. இவைபோன்ற பல பாடல்களுக்காகக் கவிஞரைப் பாராட்டலாம்.

இதயத்தில் வைத்துக் கூறு, நாளைவருவான் ஒரு மனிதன், என் பன புரட்சிக் கமாலின் புகழ் பெருக் குங் கவிதைகளாகும். பெண்ணடி மையை ஆசிரியர் தாக்கும்போது 'சம்மட்டியின்' ஓசை கேட்கிறது. நூலின் பிற்பகுதியில் குழந்தைப் பாடல்களும் இடையில் புகுந்துவிட் டன. வீறு பெற்றுநில் என்பது தொடங்கி, ஆறுபாடல்கள் அப்படி இருக்கின்றன. அதைப்போல ஈழம், தமிழ், சமூக ஒற்றுமை முதலியன வும் உள. எனவே பாடல்களைப் பகுதி பகுதியாக்கிப் பதித்திருந் தால் படிப்பவர்களுக்கு-ஆசிரியரின் கொள்கைகளை உணர்பவர்களுக்கு- சுலபமாகவும் சுவையாகவும் இருக் கும்.

ஆசிரியர் எதையும் ஆராய்ந்து தன் மனப்போக்கை[தனக்கே உரிய

திறனாய்வுக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன் றிலும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.

உருவகக்கதை

# இன்பம்......?

இளமைத் துடிப்புடன் இன்பத்தை நாடி...பேரின்பத்தை நோக்கி வீறு கொண்டு சீறிப்பாய்ந்து செல்கிறுன் ஆற்றுவாலிபன்.

நந்தவனம்; தென்றலில் தவழ்ந்து வருகிறது நறுமணம்; ஆலயமணியின் பேரின்ப ஒலி; ஆற்றின் அழகில் மயங்கி அவன் மேல் விழுந்த அழகு மலர்க் கன்னிகள்' இவைகளையெல்லாம் ஆற்றிளைஞன் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒரே ஓட்டம். இன்பத்தை நாடி...பேரின்பத்தை நோக்கி......

அதோ...... ஆற்றங்கரையிலே நந்தவன முருகனின் தீர்த்தத் திருவிழா!.முருகன் நீராடுகிருன். அப்பால் தவமுனிவர் ஒருவர் ஸ்நானம் செய்கிருர். மானிடர்கள் தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர்.மிருக பறவையினங்கள் தங்களின் தாகத்தைத் தீர்த்து இன்பமடைகின்றன. இவ்வின்பங்களையெல்லாம் சட்டை செய்யவில்லை ஆற்றுவாலிபன். வாலிப முறுக்குடன் ஒரே ஓட்டம். இன்பத்தை நாடி...பேரின்பத்தை நோக்கி...

அதோ கடல் கன்னி! தன்னை வரவேற்பதற்காகப் பொங்கி எழுந்து குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருக்கும் அவளை அந்த ஆற்று வாலிபன் ஆசை வேகத்துடன், இளமைத் துடிப்புடன் கட்டியணைத்து முத்தமிட்டு...சீ! கசக்கிறதே!

—இரா. சிவசந்திரன்

பாணியில் வெளியிடுகிருர். உதாரணத்துக்குப் பாரதியாரின் 'ஆத்தி சூடி இளம் பிறை அணிந்து" என்ற பாடலைத் தாக்குவதைக் காட்டலாம். 'சமரசம்' என்ற போர்வையில் பாரதியும் பாரதிக்குப் பின்வந்த சில கவிஞர்களும் இப்படியான பாடல்களைப் பாடித் தம் 'திருத்தொண்டை'ச் செய்திருக்கிருர்கள். இவற்றை ஒருசமயத்தவர்களுமே ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதுண்மை.

பொதுவாகப் புரட்சி என்ற போர்வையில், சமயத்தை மறந்து அதைத்தாக்கி அதை ஒழித்துவிட்டே மறுகாரியம் பார்ப்போம் எனப் பாடிவரும் இக்காலக் கவிஞர் சிலர் போலில்லாமல் சமய அடிநாதத்திலே, அதில் ஒட்டியிருக்கும் சில ஒட்டறைகளைத் தட்டித் தூய்மை செய்யும் போக்கில் புரட்சிக் கமாலின் கவிதை நூல் அமைந்திருக்கிறது. நுண்ணிதாக ஆராய்வோருக்கு சிலவரிகள் சீர்கள் முறிவாகிப் பக்கத்துச் சொல்லோடு ஒட்டாமல் நிற்பது தெரியும். கவிதையில் எப்படியான தமிழ்ச் சொற்களையும் எடுத்தாளலாம் என்று ஆசிரியர் எண்ணுமல்-புரட்சியென்ருல் அதுதான் என்று எண்ணுமல் –தாக்கும்போதுகூடப் பண்பான சொற்களைக் கையாள வேண்டும். அல்லாது போனுல் அவருக்கும் அவருக்குப் பின்வருவோருக்கும் அது ஒரு 'நோயாக'ப் போய்விடும்.

ஈழத்தில் – குறிப்பாக முஸ்லீம் வட்டாரத்தில்-புரட்சிக்கமாலின் இத் தொகுதி வாழும் என்பது நிச்சயம்.

—கனகசெந்திநாதன்.

# வெளி வேஷம்

கலையரசு நாடகமன்றம்

பொதுப் பணத்தைக் கொள்ளை யிட்டும், கைலஞ்சம் வாங்கியும் ஊழல் ஆட்சி நடத்திவரும் மேயர், டி.ஆர்.ஓ, கல்வி அதிகாரி, போலிஸ் அதிகாரி ஆகியோர், நிர்வாக நடை முறைகளைப் பார்வையிட மேலதி காரி ஒருவர் மாறுவேடத்தில் வரப் போவதாக அறிந்ததும் திக்குமுக் காடுகிறார்கள். இந்த நேரத்தில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கும் சூதாடி ஒருவனை மேலதிகாரி என நினைத்து இவர்கள் அவருக்குச் செய்யாத உபசாரமெல்லாம் செய் கிறார்கள். இதுதான் சமயமென்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட சூதாடி இவர்களின் பணத்தையும் மேயரின் மகளையும் தட்டிக்கொண்டு கம்பிநீட்டிவிடுகி றார். இறுதியில் உண்மையான மேலதிகாரி வருவதாக அறிந்ததும் இந்த அதிகாரிகள் ...?

இதுதான் சென்ற 14ம் திகதி நவாலியில் கலையரசு நாடக மன்றத் தினர் அரங்கேற்றிய 'வெளி வேஷம்' என்ற நகைச்சுவை நாட கத்தின் மூலக்கதையாகும்.

ஒவ்வொரு பாத்திரமும் ஏதோ ஒரு வகையில் நகைச்சுவையை அளிக்கும் வண்ணம் அமைக்கப் பட்ட இந்த நாடகம் வெறும் நகைச்சுவை நாடகம் மட்டுமல்ல, எம்மத்தியிலுள்ள சில அதிகாரி களின் கண்ணில் பட்டால் 'என்ன நடக்குமோ?' என்று பார்ப்பவர்கள் பேசுமளவிற்குக் கருத்து மாரியும் பொழிகிறது.


இந்த நாடகத்தை மேடைக் கேற்றபடி எழுதித் தயாரித்த பெரு மையுடன் நன்றாக நடித்த பெரு மையும் திரு எஸ். அருமைநாயகத் தையே சேரும். அவரும் 'யூசுப்'பாக (போலி அதிகாரியின் நண்பன்) நடித்தசிவஅன்புவும்சேர்ந்துபாடும் 'உண்ணுணை ஒன்று சொல்லுறன் கேளுங்க' என்ற பாடல் மனதை விட்டு அகலாதபடி அமைந்துவிட் டது.

மேயர், கல்வி அதிகாரி டி.ஆர் ஓ. ஆகியோராக முறையே நடித்த செல்வரத்தினம், இராசை யா, யோசேப் ஆகியோர்பாராட்டும் படியாக நடித்துள்ளனர் போஸ்ட் மாஸ்டர், போலிஸ் அதிகாரியாக நடித்த கணபதிப்பிள்ளை, காசி ஆகி யோரும் சுமாராக நடித்துள்ளனர்

மேயரின் வேலைக்காரர்க ளாக நடித்த சின்னத்துரை சாமுவேல் ஆகியோர் அடிக்கடி சிரிப்பூட்டுவது போதாதென்று சிங்கள-தமிழ் பாடல்கள் பாடி குலுங்கக் குலுங்கவே சிரிக்க வைத்துவிட்டனர். பெண் பாத்தி ரங்களாக நடித்தவர்களில் மகேஸ் வரன் பரவாயில்லை,

நாடகத்திலுள்ள குறைகளாக, அருமைநாயகம் புராண நாடகங் களில் வருவது போன்ற மேல் சட் டையுடன் வருவதையும், யாழ்ப் பாண மக்களால்நல்லவர் வல்லவர் எனஏகமனதாகப்போற்றப்படுமஒரு மேயரை அறிந்தோ அறியாமலோ கேலி செய்வதாக நாடகத்தின் சில காட்சிகள் அமைந்துவிட்டதையும் குறிப்பிடலாம்!

—பொ. சண்முகநாதன்




வி, இராசலிங்கம், வண்ணார்
பண்ணை

கே: நீங்கள் யாரோ ஒருத்தியைக் காதலிக்கின்றீர்களாமே! உண்மைதானா?

ப: உண்மைதான்! என்னுடைய திருமதியை நான் மனதாரக் காதலிக்கின்றேன்.

க. பூமணி, வவுனியா.

கே: இந்த உலகத்தைச் சுற்றிப் பார்க்க ஆசையாக இருக்கின்றது. என்ன செய்யலாம்?

ப: உங்கள் கல்லூரியில் 'பூகோள உருண்டை' இருக்கின்றதுதானே! பூமிசாத்திர ஆசிரியரின் அனுமதியைப் பெற்றுவிட்டு, ஆசைதீர அதைச் சுற்றிப் பாருங்களேன்!

A. C காதர், சின்னக்கிண்ணியா.

கே: திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கொள்கை பற்றித் தங்களின் கருத்தென்ன?

ப: 'காலஞ்சென்ற' தனது கணவனின் கொள்கைகளைப் பின்பற்றி வந்ததனால் அம்மையாரின் மதிப்பு இப்போது 'காலஞ் சென்று' விட்டது! நாட்டின் நாலுபகுதிகளிலும் நடைபெற்றதலத்தாபனத் தேர்தல்கள் இதை நிரூபித்துவிட்டன, அம்மையார் தன் கொள்கையை மாற்ற வேண்டும்; அல்லது அரசியல் உலகத்திலிருந்து அகற்றப்பட்டு விடுவார்!

எஸ். பட்டு, எட்டியாந்தோட்டை

கே: ஈழத்து எழுத்தாளர்களுள் மிக அழகாக எழுதக்கூடியவர் யார்?

ப: பெண்களின் எழுத்தோ என ஐயுறுமளவிற்கு முத்து முத்தாக எழுதும் கவிஞர் நீலாவணன்தான்.

இரா. பாலச்சந்திரன், நவாலி.

கே: வருகிற தேர்தலில் தாங்கள் எந்தக் கட்சியை ஆதரிப்பீர்கள்?

ப: பெண்ணின் வயதையும் ஆணின் சம்பளத்தையும் கேட்கக்கூடாது. இவற்றைப்போல், ஒரு பத்திரிகாலயத்தில் வேலை செய்பவரின் அரசியற் கொள்கைகளையும் இப்படிப் பகிரங்கமாகக் கேட்கக் கூடாது!

ச. சந்திரா, வெள்ளவத்தை

கே: கம்பராமாயணத்தை இப்போதுதான் படித்துவருகின்றேன். இத்தனை சிறப்பாகக் கம்பனால் எவ்வாறு அதைப் பாட முடிந்தது என்பதை எண்ணின் அதிசயிக்காமல் இருக்க முடியவில்லையே! இதைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

ப: முதலில் தங்களைப் பாராட்டுகின்றேன். நவநாகரிகத்தின் இருப்பிடமான கொழும்பில் வசிக்கும் பெண்மணி, கம்பராமாயணம் படிக்கின்றார் என்றால் அதைப் பாராட்டாதிருக்க முடியுமா? சாகித்திய மண்டலப் பரிசைப் பெறவேண்டும் என்ற ஆசையும், பள்ளிக்கூடப் புத்தகமாக வைக்கப்பட வேண்டும் என்ற ஆசையும் கம்பனிடம் இருந்திருக்காது. அதனால்தான் அத்துணை சிறப்பாக அக் காவியத்தைப் பாட முடிந்திருக்கும்!

கு. வடிவேலு, ஊர்காவற்றுறை:

கே: சென்ற இதழில் கென்னடியின் மரணத்தைப் பற்றி தாங்கள் ஏன் ஒன்றும் குறிப்பிடவில்லை?

ப: அந்த மகானின் படுகொலைக்கு முன்பே சென்ற மாதக் 'கலைச்செல்வி' முழுவதும் தயாராகி விட்டது. ஆகவேதான் கென்னடியின் மரணம் இதழில் இடம்பெறவில்லை. உரிய நேரத்தில் அட்டைப் படம் வராததுதான், சென்றமாத இதழ் வெளிவருவதைத் தாமதப் படுத்தியது!

கே. இறந்ததன் பின்பும் சிலருக்கு நோபல் பரிசு வழங்கப் பட்டதல்லவா? அப்படியானால், கென்னடிக்குச் சமாதானப் பரிசு டைக்குமா?

ப. கிடையாது. பரிசுக்குத் தகுதியானவர்களின் பெயர்கள், ஒவ்வோராண்டின் பெப்ரவரி மாதத்தில் நோபல் பரிசுக் கமிட்டிக்குச் சிபார்சு பண்ணப்படவேண்டும். அந்தவேளையில், அவர்கள் உயிருடனும் இருக்க வேண்டும். இது நோபல் பரிசு சம்பந்தமான முக்கிய நிபந்தனைகளுள் ஒன்று. கென்னடியின் பெயரை இனிமேல் தான் சிபார்சு பண்ணலாம். ஆனால் அவர் உயிருடனில்லையே! ஆகவே அவருக்கு நோபல் பரிசு கிடையாது. ஒன்று கேட்கின்றேன், அவர் நோபல் பரிசை எதிர்பார்த்தா, சமாதானத்திற்குப் பாடுபட்டார்? இல்லையே! உலகத்தில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதுதான் நாம் அவருக்குக் கொடுக்கக்கூடிய சிறந்த பரிசு.

அ. மணவாளன், கண்டி.

கே: தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கை பலன் தருமா?

ப: அனைவரும் திரிகரண சுத்தியுடன் நேர்மையாகப் பாடுபட்டால், நிச்சயம் பலன் கிட்டும். 'தலைவர்கள் மட்டும் கஷ்டப்படட்டும். நாம் பலனை அனுபவிப்போம்' என்றிருந்தால் எந்த நன்மையும் எவருக்கும் ஏற்படாது!

மு. ஆறுமுகநாதன், அச்சுவேலி.

கே 'கலைமகள்' பத்திரிகையில் கேள்விகட்குப் பதிலளிப்பவர் யார்?

ப: 'கலைமகள்' நிர்வாக ஆசிரியர் வித்துவான் திரு. கி. வா. ஜகந்நாதன் M. A. அவர்கள் "விடையவன்" என்ற பெயரில் அருமையான இலக்கிய விடைகளை அளித்து வருகின்றார்!

A. C. H. லோஜி, சின்னக் கிண்ணியா.

கே: காதலித்தவளைக் கைவிடுவது நல்லதா?

ப: நெடுகிலும் பிடித்துக்கொண்டிருப்பதும் சாத்தியமில்லையே!

வி.ஏ. கார்த்திகேசன், நல்லூர்.

கே: தங்களுக்கும் ''சுதந்திரன் குயுக்தி"க்கும் ஏதாவது தொடர்புண்டா?

ப: தொடர்பில்லை; தொழில் ரீதியில் ஒற்றுமையுண்டு. ''சுதந்திர''னில் அவர் செய்வதை, நான் 'கலைச் செல்வி"யில் செய்கிறேன். ''கேள்விக்குப் பதிலளிப்போர்பலவேகயா" என்று ஒன்று தொடங்கினால், அதில் அவரும் நானும் சரி சமமான அங்கத்தவராகலாம்!

ம. சாந்தகுமாரி,
வல்வெட்டித்துறை.

கே: சில மாதங்களுக்கு முன் ''ஆனந்தவிகடன்" பத்திரிகையில் முத்திரைக் கதை எழுதிய "குந்தவை" யார் தெரியுமா?

ப: தொண்டைமானாற்றைச் சேர்ந்த அவருடைய சொந்தப் பெயர் இரா. சடாட்சரதேவி இப்போது இலங்கைப் பல்கலைக் கழகத்தில் மாணவியாயிருக்கின்றார்.

கே: இலங்கையிலுள்ள பெண் எழுத்தாளர்களின் பெயர்களைக் கூற முடியுமா?

ப: சகிதேவி. குறமகள், புதுமைப்பிரியை, பாலேஸ்வரி, பவானி சாந்தினி, யாழ்நங்கை. குந்தவை, ஆகியோரைத்தான் இப்போது குறிப்பிடலாம். உமா, வதனி லதிகா, பூவழகி, மதி, லீலா, அம்பிகா போன்றவர்கள் இரண்டொரு கதைகளுடன் பேனாவைக் கீழே வைத்துவிட்டார்களே!

சி. சுப்பையா, சுண்டிக்குளி.

கே: சிவாஜி. எம். ஜி. ஆர். சரோஜாதேவி போன்றவர்களை இங்கு வரவழைத்து, அவர்களுடன் நமது நாட்டின் சிறந்த நடிகர்களையும் சேர்த்து இங்கு படம எடுத்தாலென்ன?

ப: அவர்களை இங்கு வரவழைத்துப் பராமரிப்பதே, ஆனைகட்டித் தீனி போடுவதைப் போன்றது. பிறகு படமும் எடுப்பதானால்...? அந்த அளவிற்குப் படத்தில் நாட்டமுள்ள பண 'முதலைகள்' எவரும் இங்கில்லை, அவர்களாகவே மனம் விரும்பி இங்கு கௌரவ நடிகர்களாக வந்தால்த்தான் உண்டு!

சி. செல்வபாலன், கந்தர்மடம்.

கே: நான் ஒரு மாதத்தையும் திகதியையும் சொல்வேன். அன்று என்ன கிழமை என்பதைத் தங்களால் சொல்லமுடியுமா?

ப: முடியுமே! கிழமையை மட்டுமல்ல, அன்றைய திதி, நட்சத்திரம், யோகம், இராகுகாலம், சுபநேரம்' மற்றைய முக்கிய விபரங்கள் எல்லாவற்றையும் சொல்வேனே-மெய்கண்டான் கலண்டரைப் பார்த்து!

த. பரமானந்தன், பண்டாரவளை

கே: 'நடிகர்திலகம்' படவுலகை விட்டு விலகப் போகின்றார் என்பதைக் கேட்க மனதிற்குச் சங்கடமாக இருக்கின்றதே!

ப: அவர் சொன்னது முழுவதையும்கவனித்தீர்களா?'இப்போதுள்ள முப்பதிற்கு மேற்பட்ட படங்களையும் முடித்துவிட்டு, தன் இலட்சியங்களின் உருவமாகத் தானகவே ஒரு படத்தைத் தயாரித்துவிட்டு, பின் ''சிவாஜி"யை உருவாக்கிவிட்டு... பின்புதான் திரையுலகிலிருந்து ஓய்வுபெறுவாராம். நடக்கக்கூடிய காரியமா இது? 'அகில உலகம்

முழுவதும் சமாதானத்தை ஏற்படுத்திவிட்டு நான் பிரதம மந்திரி பதவியை துறக்கப் போகின்றேன் என்று நேரு சொன்னால்; அகிலம் முழுவதும் கொம்யூனிஸத்தைப் பரப்பி விட்டு நான் அரசியலில் இருந்துஓய்வு பெறப்போகின்றேன் என்று குருஷேவ் சொன்னால்-யாராவது பொருட் படுத்துவார்களா? நடக்க முடியாத காரியங்கள் இவை. உயிருள்ளவரையும்அநதநந்தத்துறையில் தான் ஈடு பட்டிருப்பார்கள். விடுங்கள் கவலையை!

எஸ்: மகேந்திரன், அனுராதபுரி

கே: சமீபத்தில் வெளியான படங்களுட் சிறந்தவை எவை?

ப: இதுசத்தியம், கற்பகம், முதலியவற்றைக் கூறலாம்.

ஆர்: வைத்திலிங்கம், கிளிநொச்சி

கே: தாங்கள் சிறுகதை எழுதுவதில்லையா? கருவை எங்கே தேடுவீர்கள்?

ப: கதை எழுதி வாசகர்களைப் 'போர்' அடிக்கும் கைங்கரியத்தில் நான் ஈடுபடுவதில்லை. கட்டாயம் கதை எழுதத்தான் வேண்டும் என்று யாராவது நிர்ப்பந்தப்படுத்தினால், இருக்கவே இருக்கின்றது ஆசிரியருக்கருகிலுள்ள குப்பைக் கூடை! அதற்குள் ஒருதடவை மட்டும் கையை விட்டால் போதும் ஏராளமான கதைகளையும் 'கரு'க்களையும் எடுத்துவிடலாம். ஒன்றின் தலையையும், இன்னொன்றின் கையையும், மற்றதின் காலையும் ஒன்று சேர்த்தால் கதை தயார்!!

உங்கள் கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதி கீழேயுள்ள முகவரியை வெட்டிஒட்டி அனுப்புங்கள்:

**தாண்டவக்கோன்**
மே/பா கலைச்செல்வி.
பாலன்வெளியீடு.
செட்டிகுளம்.



# படிமுறை அட்சர கணிதம்

*108 நாள்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும், விடைகளும் கூடியது.*

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம் 1967 டிசம்பர் வரை பெற்றது.

ஆக்கியோன்.

## A. J. ஆசீர்வாதம் B. Sc. ( Lond)

[ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்]

6 ஆம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் - 1-60
7 " " " " " - 1-60

உங்கள் பிரதிகளுக்கு:-

## ஆசீர்வாதம்

### அச்சகம் சக புத்தகசாலை

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி:- 274)

---

# Chandra Knitting Company

HIGH CLASS HOSIERY MANUFACTURERS

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும்
பெருமை மிகுந்த

**சந்திரா பெனியன், பெனியன் வகைகள்**

- ரீ ஷேட்
- பேபி வெஸ்ட்
- ஸ்போட் ஷேட்
- ஸ்வெட்டர்ஸ்
- பேபி சன் சூட்

முதலியவற்றையே கேட்டு வாங்கி உபயோகியுங்கள்

## சந்திரா நிட்டிங் கம்பனி

(உரிமையாளர்: M. T. செல்லையா)

**46, பிறவுண் வீதி : யாழ்ப்பாணம்**

# இலங்கா நிதி லிமிற்றெட்

## 10 ஆண்டு நிரந்தர சேமிப்பு மூலம்

ரூ 500-00, 10 ஆண்டில் ரூ. 1000-00 ஆகும்
ரூ. 1000-00, 10 ,, ரூ. 2000-00 ,,

## நிரந்தர சேமிப்பு ஒருமாத அறிவித்தலின் பின் கீழ்க்கண்ட தொகையை எடுக்கலாம்

| சேமிப்பு | ரூ 500-00 க்கு | ரூ. 1000-00 க்கு |
|---|---|---|
| 1 ஆண்டின் பின் | 535-00 | 1070-00 |
| 2 ,, | 572-00 | 1144-00 |
| 3 ,, | 611-00 | 1222-00 |
| 4 ,, | 652-00 | 1340-00 |
| 5 ,, | 695-00 | 1390-00 |
| 6 ,, | 745-00 | 1490-00 |
| 7 ,, | 800-00 | 1600-00 |
| 8 ,, | 860-00 | 1720-00 |
| 9 ,, | 925-00 | 1850-00 |
| 10 ,, | 1000-00 | 2000-00 |

தலைமை ஆபிஸ்: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
கிளை: வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!

மிகச் சிறந்த
படங்களுக்கு...?

பிறின்ஸ்
சுன்னுகம்.

மாலாஸ்
காங்கேசன்துறை.


கலாதேவி அச்சகம், சுன்னுகம்.